# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௪௭ | திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௪, தை பிப்பிரவரி 1973 | பரல் ௬

# திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி

(முன் பரல் ௫ பக்கம் ௨௫௬ தொடர்ச்சி)

திரு. இராமச்சந்திர ஐயர் அவர்கள் அண்ணாமலையரசர் மணிவிழாப் பரிசளிப்பதற்கு எடுத்துச் சென்ற அழகிய துணிக் கட்டடமுடைய திருக்குறள் பரிமேலழகருரையினைக் கண்டு பெருமதிப்புக்குரிய குமாரராச முத்தையா செட்டியாரவர்கள் "எங்கள் தந்தையார் இராசா சர் அவர்கட்குத் தெய்வத் திருக்குறளின்பால் தனிப்பெரும் பற்று உண்டு. எனவே, தாங்கள் கொண்டுவந்த பரிசைப் பேருவகையோடு பெற்றுக் கொள்வார்" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறிப் பரிசு வழங்குதற் குரிய வாய்ப்பினை அமைத்துக் கொடுத்தார்களாம். மணிவிழா முடிந்தபின் திரு ஐயர் அவர்கள் சென்னைக்குத் திரும்பியதும் யான் திருக்குறள் பரிமேலழகருரை பரிசுப் பதிப்பினை அவர்கள் வீட்டுக்கும் அதன்பின் எழுமூர் நிலையத்துக்கும் அனுப்பி வைத்த செய்தியினைத் தம் வீட்டார் தெரிவித்தனராம். அது கேட்டு மனமுவந்து அதுமுதல் என்மீது அளவற்ற அன்பு காட்டி வந்ததோடு தமது கல்வித்துறையில் கழகத்துக்கு ஒல்லும் வகையில் உதவிகளுஞ் செய்து வந்தனர்.

இதுகாறும் திருக்குறள் பரிமேலழகருரையில் எத்தனையோ மலிவுப் பதிப்புகள் வெளிவந்திருப்பினும் கழகம் பன்னிரண்டு பதிப்புகட்குமேல் பல ஆயிரம் படிகளை அச்சிட்டுப் பரப்பிப் பெரும்புகழ் பெற்று வருகிறதென்பது கண்கூடு. 1956இல் அலகாபாத்தில் நடைபெற்ற 4ஆவது மாநாட்டிலும், 1957இல்

புதுதில்லியில் நடைபெற்ற 5ஆவது மாநாட்டிலும் திருக்குறள் பரிமேலழகருரை ரெக்சைன் கட்டடமுள்ள பதிப்புக்கும், பஞ்சு பொதிந்த தோல்கட்டடமுள்ள பதிப்புக்கும் முறையே அனைத் திந்திய அச்சகக் குழாத்தினர் பாராட்டிதழும், பரிசும் வழங்கி யுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருக்குறள் பரிமேலழகருரையினை முதன்முதல் மிகவுங் குறுகிய காலத்தில் அழகுறவும் பிழையில்லாமலும் அச்சிடுவ தற்குத் துணைபுரிந்த எனதன்பிற்குகந்த புரொகிரசிவ் அச்சக மேலாளர் திரு. சி. மு. கோவிந்தராச முதலியாரவர்கட்கும், தருமையாதீன வித்துவான் காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை யவர்கட்கும் கழகம் என்றென்றும் நன்றி செலுத்துங் கடப்பாடுடையது. புத்தகங்களை அழகுறப் பிழையின்றி அச்சிட்டுக் கவின்மிகு கட்டடஞ் செய்து கழகம் வெளியிட்டதன் பின்னரே பள்ளி, கல்லூரிகளின் பரிசு விழாக்களிலும் திருமண விழா மணிவிழாக்களிலும், சமயம் இலக்கியம் பிற மாநாடு களிலும் புத்தகங்களைப் பரிசாக வழங்கும் பழக்கம் ஏற்பட்ட தென்பது யாவரும் அறிந்ததொன்றாகும்.

## திருக்குறள் பகுதிப் பதிப்புகள்

### திருக்குறள் 11-20 அதிகாரங்கள்

1927ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் தேர்வுக்குத் திருக்குறளில் 11 முதல் 20 அதிகாரங்கள் மட்டும் பாடமாக வைக்கப் பெற்றிருந்தன. அவ்வாண்டுத் தேர்வுக்குப் பயிலும் ஆசிரிய மாணவர்கட்குப் பயன்படும்பொருட்டுக் கழகப் புலவரைக் கொண்டு அவ்வதிகாரங்கட்குச் சொற்பொருளும் பரிமேலழகருரை விளக்கமும் எழுதச்செய்து 18/12 செ. மீ. அளவில் அச்சிட்டு 1926ஆம் ஆண்டில் வெளியிடலாயிற்று. உரிய காலத்தில் வெளியிடப் பெற்றதால் அதனை ஆசிரிய மாணவர்கள் பெரிதும் போற்றினர்.

### திருக்குறள் அதிகாரங்கள் 60 முதல் 62, 96 முதல் 102

இதனை 1934ஆம் ஆண்டில் ஆசிரிய மாணவர் பயிற்சிப் பள்ளித் தேர்வின் பொருட்டுச் சொற்பொருள் பரிமேலழகருரை விளக்கங்களுடன் அச்சிட்டு வெளியிட்டோம்.

### திருக்குறள் நூறு, திருக்குறள் இருநூறு

பள்ளி மாணவர்கள் பள்ளியில் கல்வி பயிலுங்காலத்தே வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுந் தலைசிறந்த

இலக்கியமாய் இலங்குந் திருக்குறளைக் கற்றுக் கற்றபடி நடந்து நல்வாழ்வு பெறுதல் வேண்டுமென்ற நன்னோக்கத்தோடு 'திருக்குறள் நூறு', 'திருக்குறள் இருநூறு', 'திருக்குறள் முந்நூறு' என்னும் மூன்று நூல்களை வெளியிட வேண்டு மென்ற விருப்பம் விளைந்தது. 1943ஆம் ஆண்டில் 'திருக்குறள் நூறு' பொழிப்புரை அருஞ்சொற் பொருள் விளக்கத்துடன் 12/9 செ. மீ. அளவில் அச்சிடப்பெற்று வெளிவந்தது. தொடர்ந்து சில பதிப்புகளும் வெளியிடப்பெற்றன. 1947இல் திருக்குறள் இருநூறும் முன்னதைப்போல் வெளியிடப் பெற்றது. திருக்குறள் முந்நூறு மட்டும் எண்ணியபடி வெளியிடப்பெறவில்லை.

## திருக்குறள் 50, 60, 70, 80, 100

1947ஆம் ஆண்டில் தமிழகவரசுக் கல்வித்துறை அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற என் பெருமதிப்புக்குரிய பேரன்பர் மாண்புமிகு தி. சு. அவிநாசிலிங்கஞ் செட்டியாரவர்கள் பள்ளிகளில் திருக்குறளை மாணவர்கள் பயிலும் பொருட்டு முதற்படிவ (first-form) முதல் பள்ளியிறுதி வரை ஒவ்வொரு படிவத்திலும் அதனைக் கட்டாயப் பாடமாகப் பாடத்திட்டத்தில் அமைக்கும்படி ஆணை பிறப்பிக்கச் செய்தனர். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால் 1080 பாடல்களிலிருந்து ஒன்று முதல் ஐந்து படிவங்கட்கும் முறையே 50, 60, 70, 80, 100 திருக்குறட் பாக்களைத் தேர்ந்தெடுத்துப் பாடமாக அமைத்துத் திருக்குறள் பாட அட்டவணையினை அரசினர் வெளியிட்டனர். அவ்வட்டவணையின்படி கழகம் முதல் ஐந்து படிவங்கட்கும் திருக்குறட் பாக்களுக்குத் தெளிபொருள் விளக்கம் எழுதித் தனித்தனி நூலாக 18/12 செ. மீ. அளவில் வெளியிட்டது. ஆட்சி மாறியதும் அந்தப் பாடத்திட்டம் கைவிடப்பட்டது. எனினும், ஒவ்வொரு வகுப்புப் பாடப்புத்தகத்திலும் ஒருசில குறட்பாக்கள் மட்டும் இடம் பெறுவதுண்டு.

## திருக்குறள் குறுந்திரட்டு, திருக்குறள் பெருந்திரட்டு

முதல் வகுப்பிலிருந்து தொடர்ந்து பள்ளியில் பயிலும் மாணவர்கட்குப் பயன்படும் பொருட்டு முதல் மூன்று படிவங்கட்குரிய மூன்று நூல்கள் ஒரு தொகுதியாக்கித் 'திருக்குறள் குறுந்திரட்டு' எனவும், முதல் ஐந்து படிவங்கட்குரிய ஐந்து நூல்கள் மற்றொரு தொகுதியாக்கித் 'திருக்குறள் பெருந்திரட்டு' எனவும் தனித்தனிக் கட்டடஞ் செய்து வெளியிடப்பெற்றன.

இங்ஙனமெல்லாம் பள்ளி மாணவர்கள் திருக்குறளைப் படிக்கும் பொருட்டுத் திருக்குறட் பகுதி நூல்களைக் கடமை யுணர்வோடு கழகம் வெளியிட்டுள்ளது.

## தாள் கட்டுப்பாடு

இரண்டாவது போர் தொடங்கிய காலமுதல் ஏற்பட்ட தாள் கட்டுப்பாடு 1950 வரையில் இருந்தது. பதிப்பாளர்கள் முன் ஆண்டுகளில் வாங்கிய தாள் அளவைக் கொண்டு இத்தனை டன் (Ton) தாள் வாங்கிக் கொள்ளலாம் என்று ஒவ்வொரு பதிப்பாளர்க்கும் அட்டை கொடுக்கப்பட்டது. அட்டையில் குறிக்கப்பெற்ற அளவுக்கு மேல் தாள் வேண்டு மெனின் தகுந்த காரணத்தைக் காட்டி அரசினர் பரிந்துரை யோடு அனுப்பப்பெறும் விண்ணப்பத்தைப் பார்வையிட்டுக் கட்டுப்பாட்டதிகாரி கூடுதல் தாள் வழங்குதற்குரிய திட்டம் இருந்தது. கழகத்துக்கு ஒதுக்கப்பெற்ற அளவுக்குமேல் பாட நூல்களை வெளியிடுவதற்குக் கூடுதல் தாள் கட்டாயமாக வேண்டியிருந்தது. மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. தி. சு. அவிநாசிலிங்கஞ் செட்டியாரவர்களிடம் கூடுதல் தாள் வேண்டு மென்பது பற்றிச் சொல்லியதில் பயன் கிடைக்கவில்லை.

சேலம் மாவட்டக் கழகத் தலைவரும் சட்டமன்ற உறுப் பினருமாகிய திரு கே. ஏ. நாச்சியப்பக் கவுண்டரவர்கள் என்னிடம் எப்போதுமே மிக்க மதிப்பும் அன்பும் காட்டி வந்தவர்களுள் ஒருவராவர். புத்தகங்களை அச்சிடுவதற்குப் போதிய தாள் இல்லாமல் தொல்லைப்படுவதை அவர்களிடம் எடுத்துச் சொல்லிக் கூடுதல் தாள் வேண்டுமென்று தாள் கட்டுப்பாட்டதிகாரிக்கு எழுதிய விண்ணப்பத்தைக் காட்டினேன். அப்போதே என்னைத் தாள் கட்டுப்பாட்டதிகாரியிடம் அழைத்துச் சென்று கழகத்துக்கு ஏற்கெனவே ஒதுக்கப் பெற்ற தாள் அளவுக்குமேல் ஐந்து டன் தாள் வியனுக வாங்கித் தந்துதவினர். அச்செய்தியை மாண்புமிகு அமைச்சர் திரு தி. சு. அவிநாசிலிங்கஞ் செட்டியாரவர்களிடங் கூறிய போது 'திருக்குறள் வெளியீட்டுக்கென நீங்கள் கேட்டிருப்பின் கூடுதல் கொடுக்குமாறு செய்திருப்பேன்' என்று சொல்லித் தமக்குத் திருக்குறளின்பாலுள்ள பெரும்பற்றினைப் புலப் படுத்தினர்.

## திருக்குறள் தெளிவுரை

திருக்குறளைப் பொது மக்களிடையிலும் மாணவர்களிடை யிலும் பரப்பும் வகையில் எல்லாருக்கும் எளிதிலே புரியும்

நடையில் உரை எழுதிக் கையடக்கப் பதிப்பாக வெளியிடுதல் வேண்டுமென்ற கருத்துத் தோன்றியது. 1924இல் திருக்குறள் மூலத்தை முதன்முதல் அழகுறத் தமது சிவகாமி விலாச அச்சுக்கூடத்தில் அச்சிட்டும் 1937இல் திருக்குறள் பரிமேலழக ருரையைத் தாம் மேலாளராக இருந்த புரொகிரசிவ் அச்சகத்தில் அச்சிட்டுந் தந்தவரான திரு சி. மு. கோவிந்தராச முதலியார் 1948இல் கழகந் தொடங்கிய 'அப்பர் அச்சக'த்தில் மேலாளராக அமர்த்தப் பெற்ருர். திருக்குறளுக்குத் தெளிவுரை வெளியிடுவது பற்றிய எனது கருத்தைத் திரு முதலியாரிடந் தெரிவித்தேன். இருவருமாக எண்ணிப்பார்த்துத் திருக்குறளுக்கு இனிய தமிழில் எளிய நடையில் தெளிவான உரை எழுதியுதவத்தக்க திறமை யுடையவர் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனுரவர்களேயாவர் என முடிவு செய்தோம். இங்ஙனம் முடிவு செய்ததற்குரிய காரணத்தை முதற்கண் இங்கே விளக்க வேண்டுவது இன்றியமையாததாகும்.

வித்துவான் திரு மு. வரதராசனுரவர்கள் பச்சையப்பன் கல்லூரிக்கு வருமுன்பு திருப்பத்தூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணிபுரிந்து வந்தனர். 1935ஆம் ஆண்டில் வித்துவான் பட்டத் தேர்வில் முதல் வகுப்பில் முதலாவதாகத் தேர்ச்சிபெற்று ஆயிர ரூபா பரிசும் பெற்றனர். அடுத்து பி. ஓ. எல். (B. O. L.) பட்டமும் பெற்றுள்ளனர். பட்டம் பெற்றதற்குரிய மேலுடை (gown) யுடன் அவரது படம் 'செந்தமிழ்ச் செல்வி' சிலம்பு 17, பரல் 5இல் வெளிவந்திருக்கிறது. அது முதலே அவரது நட்பு எனக்குக் கிடைக்கப் பெற்றுப் பிறைமதிபோல் வளர்ந்து வரலாயிற்று.

பின்னர் அவர் திருப்பத்தூர்ப் பள்ளியினின்றும் விலகிச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் துணை விரிவுரை (Tutor) யாளராக 1939இல் அமர்த்தப் பெற்ருர். சென்னையிலே அவர் குடியிருப்பதற்குத் தங்கசாலையையடுத்துள்ள வெங்கடேச நாயக்கன் தெருவில் ஒரு வீடு அமைத்துக் கொடுத்ததோடு அடிக்கடி அவர் இல்லஞ் சென்று அவரோடு அளவளாவி வருவதுண்டு. நெடுநேரமிருத்தலோ வீணுரையாடலோ செய்யேன். அவரும் அதை விரும்பார். சிறுவர்கட்கு எளிய நடையில் குழந்தைப் பாடல்களும், சிறுகதைகளும் எழுதுமாறு வேண்டினேன். குழந்தைப் பாடல்கள் சிலவற்றை ஆக்கித் தந்தனர். அவற்றைப் படங்களுடன் 'குழந்தைப் பாடல்கள்' என்ற தலைப்பமைத்து வெளியிடலானேன். அவர் எழுது கோலால் முதன்முதல் எழுதப்பெற்ற நூல் அதுவேயாகும்.

அதனை அடுத்து அவர் எழுதியவை 'இளைஞர்க்கான இரு சிறு கதைகள்' என்ற நூலும் 'செகப்பிரியர் நாடகக் கதைகளில் ஆறு கதைகள்' அடங்கிய இரு நூல்களுமாகும். சார்லஸ் லாம் ஆங்கிலத்தில் எழுதிய கதைகளைக் கொண்டு செகப்பிரியர் நாடகக் கதைகள் எழுதப் பெற்றனவாகும். முதற் புத்தகத்தில் 'வெனிசு வணிகன்', 'விரும்பிய வண்ணமே', 'மாக் பெத்' ஆகிய மூன்றும், இரண்டாவது புத்தகத்தில் 'புயல்காற்று', 'லியர் மன்னன்', 'ஆம்லெத்' ஆகிய மூன்றும் அடங்கியுள்ளன. செகப்பிரிய நாடகக் கதைகளில் எஞ்சிய யாவும் 3 முதல் 8 புத்தகங்களில் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையாரால் எழுதப்பெற்று வெளிவந்துள்ளன. இவற்றையடுத்துப் புலவர் திரு. மு வரதராசனுர் புதிய பாடத் திட்டத்தின்படி தொடக்கப் பள்ளிக்கும், நடுநிலைப் பள்ளிக்குமாகக் 'கழகத் தமிழ் இலக்கணம்' என்ற தலைப்பில் இரு நூல்கள் எழுதியுள்ளனர்.

1941இல் மேனாட்டுச் சிறுகதைகள் சிலவற்றைத் தழுவிச் சிறுவர்கள் விரும்பிப் படிக்கும் பொருட்டு எளிய நடையில் சில கதைகளை எழுதித் தந்தனர். அவை 'கழகச் சிறு கதைகள்' என்ற தலைப்பில் மூன்று சிறு நூல்களாக வெளியிடப் பெற்றன. 1942இல் உயர்நிலைப்பள்ளிப் பாடத்திட்டத்திற் கேற்ப அவர்கள் எழுதித்தந்த 'கழகத் தமிழ் இலக்கணம்' மூன்ருவது புத்தகம் வெளியிடப்பெற்றது. அவர் எழுதிய கழகத் தமிழ் இலக்கணம் மூன்று புத்தகங்களும், எக்காலத் துக்கும் நிலையாகவே பள்ளிகட்குப் பாடமாக வைப்பதற்குரிய தகுதியுடையன என்று ஆசிரியர் சிலர் கூறுவதுண்டு. அரசு அடிக்கடி இலக்கணப் பாடத் திட்டத்தை மாற்றுவதனுல் திரு மு. வரதராசனுர் எழுதிய நூல்களை மீண்டும் அச்சிடுவதற் கில்லாமற் போயிற்று.

டாக்டர் மு. வ. அவர்கள் சென்னைக்கு வருதற்கு முன்பே அவ்வப்போது கழகம் நீண்டகாலமாக நடத்திவரும் 'செந் தமிழ்ச் செல்வி' இதழுக்குக் கட்டுரைகள் எழுதுவதுண்டு. அவர் பெரும்பாலும் இலக்கணம், மொழியியல் பற்றிய கட்டுரை களையே எழுதுவர். ஏறத்தாழ நான்கைந்து ஆண்டுகள் 'செல்வி'க்கு அவர் கட்டுரைகள் எழுதியுள்ளார். அக் கட்டுரை களில் ஒருசில அவர்தம் 'மொழியியல் கட்டுரை' என்னும் நூலிலே சேர்க்கப்பெற்றுள்ளன.

திரு மு. வரதராசனுர் எழுதித்தரும் கையெழுத்துப் படிகளில் அடித்தல் திருத்தல் இரா. எழுத்துக்களும் தனித் தனியாக ஒன்றுபோலத் தெளிவாகவே இருக்கும். அவர்

ஒரு நூலை எழுத வேண்டுமானால் அதற்குரிய கருத்துக்களைத் தமது உள்ளத்திலே தெளிவுபெற அமைத்துக்கொண்டு எழுதுவர். அவர் கையெழுத்துப்படியை அச்சுக் கோப்பவர் அச்சுப்படியை அச்சுக் கோப்பதுபோல் பிழையில்லாமல் மகிழ்ச்சியோடு அச்சுக்கோப்பர். தடித்த எழுத்தில் அமைக்க வேண்டிய தலைப்புச் சொற்கட்கும் இடைநடுவில் வருகிற சிறப்புச் சொற்கட்கும் இரட்டை அடிக்கோடுகளும், ஒற்றை அடிக்கோடுகளும் இடுவர். காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி, கேள்விக்குறி, வியப்புக்குறி முதலிய குறிகளையும் தவறாமல் இடுவர். அவர்கட்கு மெய்ப்பினை அனுப்புவதற்கு முன் யான் ஒருமுறை படித்துத் திருத்தியே அனுப்புவேன். அவர் மெய்ப்பில் புதுக் கருத்துக்களைப் புகுத்துவதோ சொற்களை மாற்றியமைப்பதோ பெரும்பான்மை கிடையாது.

1941இல் 'கழகச் சிறுவர் பாட்டு', 'கழக இளைஞர் பாட்டு' என்ற இருநூல்கள் வெளியிடப் பெற்றன. அவற்றில் புலவர் மு. வரதராசனார் ஆக்கிய பாடல்களுள் ஒன்றிரண்டு சேர்க்கப் பெற்றுள்ளன. இதுகாறும் அவரால் எழுதப்பெற்ற நூல்களில் தமது பெயரை நூல் முகப்பிலோ விளம்பரத்திலோ குறிக்க வேண்டாவென அவர் கூறியவாறு குறிக்கவில்லை.

முதியோர் கல்வியின் பொருட்டு யான் 'தானே தமிழ் கற்குமுறை' என்னும் நூலைப் பெரிய வரைப்பட ஏடு (Drawing Note-book) அளவில் தமிழைக் கற்கும்போதே தமிழ் எழுத்துக்களை எழுதவும் கற்றுக்கொள்ளும் வகையில் ஆக்கிப் படங்களுடன் 1939ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிட்டேன். அதற்கு அப்போது கல்வி அமைச்சராகவும் என் பெருமதிப்புக்கும் பேரன்புக்குமுரியவராகவும் இருந்த மாண்புமிகு டாக்டர் ப. சுப்பராயனவர்கள் முகவுரை வழங்கியுள்ளனர். அந்நூலைத் தமிழ்ப் பெரும் புலவர்களும், அரசியல் பெருமக்களும், கல்வித்துறை அதிகாரிகளும் பெரிதும் போற்றிப் பாராட்டுரை வழங்கியுள்ளார்கள்.

**திரு. மு. வரதராசனார் வழங்கிய பாராட்டுரை வருமாறு**

> 'தானே தமிழ் கற்குமுறை' என்னும் இந்நூல் திருத்தமாய் எழுதுதல், பொருத்தமாய்ப் படித்தல் இரண்டினையும் ஒருங்கே கற்பிக்க வல்லது. குறைந்த கால அளவில் நிறைந்த பயிற்சி அளிக்கவல்லது. கல்லா முதியவர்க்கே அன்றிக் கற்கும் குழந்தைகட்கும் ஊக்கந்தரவல்லது. இத்தகைய சீரிய முயற்சியில்

ஈடுபட்டுச் செய்வன திருந்தச் செய்யுங் கழகத்தாரைப் பாராட்டுதல் கடமையே யாகும்.

அதையொட்டிப் 'படியாதவர் படும்பாடு' என்ற ஒரு நூலை வெளியிடுவான் கருதிப் படிக்காத மக்கள் தம் வாழ்க்கையில் படும் தொல்லைகளையும், இடர்களையும், இழப்புகளையும் பற்றித் தாம் நேரிற் கண்டறிந்த குறிப்புகளோடு தம் பட்டறிவினையுஞ் சேர்த்து எழுதியனுப்புமாறு அறிஞர் சிலர்க்கு அறிக்கை யனுப்பி வேண்டினேன். திருவாளர்கள் சேலை சகதேவ முதலியார், கோவை சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், கோவை சு. நடராச பிள்ளை ஆகிய மூவரும் கட்டுரைகளும், யோகி சுத்தானந்த பாரதியாரும் கவிஞர் சி. து. கன்னிசாமியும் 'கல்வியே கண்' என்ற தலைப்பில் பாமாலையும் அனுப்பினர். யான் அறிந்த குறிப்புகளையும் எழுதி மேலே குறிப்பிட்ட கட்டுரைகள், பாமாலைகளோடு பேராசிரியர் மு. வரதராசனாரிடங் கொடுத்துப் 'படியாதவர் படும்பாடு' என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதித் தருமாறு வேண்டினேன். ஒரு கிழமையில் 'கல்வி இல்லா நல்லப்பர்', 'இளைஞன் உற்ற இடர்', 'வண்டிக்காரன் 'துன்பம்', 'கிழவி பட்ட கடன்', 'கல்லாதவர் வாக்குரிமை', 'கல்வியே கண்', 'கல்வியில்லையேல் வாழ்வில்லை' முதலிய பன்னிரு தலைப்புகளில் எளிய இனிய நடையில் 98 பக்கங்களில் ஒரு நூலை ஆக்கித் தந்தனர். கோவை இராம கிருட்டிண கல்வி நிலையத் தலைவர் திரு தி. சு. அவிநாசிலிங்கஞ் செட்டியார் முகவுரை எழுதி வழங்கியது அதற்கு அணிகலனாக வமைந்தது. இந்நூலின் பதிப்புரையில் மட்டும் பேராசிரியர் திரு மு. வரதராசனார் தொகுத்துள்ளதெனக் குறிப்பிடப் பட்டுள்ளது. அடுத்துத் தொடக்கப் பள்ளிக்குத் துணைப் பாடமாக அமையும் முறையிலும், முதியோர் கல்விக்குப் பயன்படும் வகையிலும் 'கண்ணுடைய வாழ்வு' என்ற தலைப்பில் வினவிடை முறையில் 11 தலைப்புகளில் 36 பக்க அளவில் சிறு நூலொன்று 1945ஆம் ஆண்டில் அவர்தம் பெயருடன் வெளியிடப் பெற்றுள்ளது.

1942ஆம் ஆண்டில் பேராசிரியர் மு. வரதராசனார் சென்னைப் பல்கலைக் கழகத்து மொழிநூல் பாடத் திட்டத்தை யொட்டிப் பச்சையப்பன் கல்லூரியில் பி. ஓ. எல். ஆனர்சு (B. O. L. Hons.) வகுப்பிற்கு மொழிநூல் பாடம் கற்பிக்கலானார். அப்பாடத்தை நூலுருவாக்கி 1947இல் கழகவழி 'மொழி நூல்' என்ற தலைப்பில் அச்சிட்டு வெளியிடுவதற்குத் தந்தனர். அதன்கண் தமிழ்மொழி பற்றிய நுட்பமான கருத்துக்களை யாவரும் கதை நூலைப் படிப்பதுபோல விரும்பிப் படித்துணரும்

வகையில் எளிய நடையில் மிகவுந் தெளிவாக விளக்கி எழுதியிருப்பது அவருக்கேயுரிய தனித்திறமையினைப் புலப்படுத்துகின்றது. அந்நூல் அடுத்தடுத்துச் சில பதிப்புகளைப் பெற்றுள்ளது. 1954ஆம் ஆண்டில் அவர் எழுதிய 'மொழி வரலாறு' என்ற நூலையுங் கழகம் வெளியிட்டுள்ளது. மொழி நூல் மொழி வரலாறு போன்று, 'தமிழ் இலக்கிய வரலாறு' எழுதுமாறும் பேராசிரியரிடம் பலமுறை யான் கூறியதுண்டு. அதனை எழுத வேண்டுமென்ற கருத்து தமது உள்ளத்திலே இருப்பதாகத் தெரிவித்தனர். ஆனால், பல ஆண்டுகள் கழித்தே அவர் தமிழிலக்கிய வரலாறு எழுதியுள்ளனரென்றும் அண்மையில் அது சாகித்திய அக்காடெமி வெளியீடாக வந்துள்ளது என்றும் அறிந்து பேருவகையடைந்தேன்.

பி.ஓ.எல். பட்டம்பெற்ற திரு மு. வரதராசனார் எம்.ஓ.எல். பட்டம் பெற்றதோடு 'சங்க இலக்கியத்தில் இயற்கை' (The Treatment of Nature in Sangam Literature) என்ற ஆராய்ச்சிக் கட்டுரையினை ஆங்கிலத்தில் எழுதி 1947ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பிஎச், டி. (Ph. D.) பட்டமும் பெற்றுள்ளனர். அந்நூலையும் 1957ஆம் ஆண்டில் கழகம் வெளியிட்டது. மேலே குறிப்பிட்டுள்ள இம் மூன்று நூல்கட்கும் கழகம் விற்பனை ஊதியம் (ராயல்டி) அளித்து வருகின்றது.

டாக்டர் மு. வ. அவர்கள் தம் சொந்தப் பதிப்புகளான அல்லி, கள்ளோ காவியமோ, பெற்றமனம் முதலிய புதினங்களும், இலக்கியத் திறன், இலக்கிய மரபு, நெடுந்தொகைச் செல்வம், திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் முதலிய கட்டுரை நூல்களும், மொழியின் கதை, எழுத்தின் கதை முதலிய மொழியாராய்ச்சி நூல்களும், திரு. வி. க., காந்தி அண்ணல் முதலிய வரலாற்று நூல்களும், மனச்சான்று, பச்சையப்பர் முதலிய நாடகங்களும், நண்பர்க்கு, தங்கைக்கு முதலிய கடித நூல்களும், கதை, அரசியல், குழந்தை வளர்ப்பு, பயணம் ஆகிய தலைப்புகளில் சில நூல்களுமாக அறுபதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுப் பெரும்புகழ் ஈட்டியுள்ளார்.

அல்லி என்னும் புதினம் நெல்லை திரு. தி. கே. கணபதி அவர்களால் டாக்டர் மு. வ. ஒப்புதலுடன் நாடகமாக அமைக்கப்பெற்று 21—3—1954 இரவு நெல்லை அருணகிரி இசைக் கழகத்தினரால் நெல்லை இசை (சங்கீத) அரங்கில் நடிக்கப் பெற்றது. அதனை டாக்டர் மு. வ. அவர்கள் நேரிலே கண்டு பெரிதும் பாராட்டினர்.

டாக்டர் மு. வ. எழுதிய நூல்களை மக்கள் கரும்பெனவும், கற்கண்டெனவும் வாங்கிப் படித்துச் சுவைத்து இன்புறுவாராயினர். அவற்றுள் சில திருமணப் பரிசாகவும், பள்ளிகளில் பரிசாகவும் வழங்கப்பெற்று வரலாயின. இங்ஙனம் டாக்டர் மு. வ. நூல்கள் 'sold like hot cake' என்ற ஆங்கில மரபுரையின்படி விரைவாக விற்கப்பெற்று அவர்கட்குத் தனிப்பெரும் மதிப்பை அளித்தன என்று சொன்னால் அது மிகையாகாது.

அவர்கள் மேற்கண்ட நூல்களைத் திட்டமிட்டு எழுதி வந்தனர். தமிழ் இலக்கியங்களையும், மேனாட்டு இலக்கியங்கள், புதினங்கள், கட்டுரைகள், நாடகங்கள், முதலியவற்றையும் வாங்குவர். இரவு நெடுநேரம் விழித்திருந்து ஒன்றிய மனத்தினராய்த் தாம் வாங்கி வந்த நூல்களைப் படிப்பது வழக்கம். அங்ஙனம் படித்தவற்றைச் சிந்தித்துத் தம் மனத்திலே அமைத்துத் தெளிவுபடுத்திக் கொள்வர். தெளிவுபடுத்திய அக்கருத்துக்களோடு தம் சொந்தக் கருத்துக்களையும் இணைத்து எளிய இனிய தமிழ்நடையில் பல நூல்களை ஆக்கித் தமிழ் மக்கட்கு நல்விருந்தாக நல்கினர். கல்லூரி விடுமுறை நாள்களில் பெரும்பாலும் தமது வீட்டிலே தங்காமல் தம் துணைவியார்க்கேயன்றிப் பிறர் யாருக்குந் தெரியாதபடி தனி இடத்திலே தங்கித் தாம் திட்டமிட்ட நூலை எழுதி முடிப்பது வழக்கம். நீண்ட நாள் விடுமுறைகளில் பெங்களூர்க்குச் சென்று அங்குள்ள தமது இல்லத்திலே தங்கி நூல்கள் எழுதுவர்.

நுண்மாண் நுழைபுலமிக்க கழக நூலாசிரியர்கள் ஒரு சிலரிடம் யான் டாக்டர் மு. வ. அவர்களைப் பின்பற்றுமாறு சொல்வதுண்டு.

டாக்டர் மு. வ. நல்ல சிந்தனையாளர், பண்பாளர், எழுத்தாளர், பேச்சாளர். அவர்தம் மாணவர்களிடம் மிகவும் அன்பாகவும் குழைவாகவும் பழகுவர். ஆசிரியர் மாணவர் உறவுக்கு அவர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறார். மாணவர்கள் அவரை 'எங்கள் மூவா' என்று வாய்குளிரச் சொல்லுவதைக் கேட்டு இன்புறுவதுண்டு. அவர் முழுப்பெயர் முனிசாமி வரதராசனார் ஆகும். அப்பெயரிலுள்ள மு-வ. என்ற முதலெழுத்துக்களை இணைத்து முவ என்றோ அல்லது மூனா வானா என்று தனித்தனியாகவோ குறுக்கி ஒலிக்காமல் மூவா என்று கூறுவது செவிக்கின்பந் தருகிறது. உண்மையில் அவர் மூவா மருந்தாகவே விளங்குகிறார். அதற்கேற்ப அவர் டாக்டர் பட்டமும் பெற்று டாக்டர் மூவா ஆனமையும் நமக்கு உவகையும் இன்பமும் ஊட்டுவதாகும்.

புலவர் சிலர் பெயர்களும், பெருமக்கள் சிலர் பெயர்களும் ஆங்கில முதலெழுத்துக்களைக் கொண்டும் தமிழ் முதலெழுத்துக்களைக் கொண்டும் தனித்தனியாகவும் இணைந்தும் வழங்கப் பெறுவதை எண்ணின் நகைப்புத் தருவதாகும். அப்பெயர்களை இங்கே விளக்காமலே தெரிந்து கொள்வீர்கள். டாக்டர் மு. வ. பெயரை ஆங்கிலத்தில் எழுதி அதன்படி அழைப்பதாயின் எம். வி. (M. V.) என்றுதான் அழைப்போம்.

மனைத்தக்க மாண்புடையாரைத் தம் வாழ்க்கைத் துணைவியாராகக் கொண்டு நன்மக்கள் மூவரைப் பெற்றுக் குறைவிலா நிறைவுடையராக வாழ்ந்துவரும் டாக்டர் மு. வ. அவர்களின் வாழ்க்கையில் ஏதாவது குறை இருக்கிறதா என்று எண்ணுவதுண்டு. உரிமையின் காரணமாக நகைச்சுவைக் குறிப்புடன் பின்வருவன தோன்றின. அவருக்கு உடன்பிறந்தான் இல்லாத குறையும் பெண் மகவில்லாத குறையுமே புலப்பட்டன. இயற்கை மருத்துவத்தில் நம்பிக்கைகொண்டு கடைப்பிடித்து வரும் டாக்டர் மு. வ. அவர்கள் மக்கள் மூவருள் ஒருவர்கூடத் தந் தவத் தந்தையாரின் தமிழ்த்துறையில் ஈடுபடாமல் ஆங்கில மருத்துவத்துறையில் பட்டம் பெற்று விளங்குவது மற்றொரு குறையுமாகும். ஆனால், நிறைந்த உள்ளமுடைய டாக்டர் மு. வ. அவர்கட்கு இவை குறையாகா என எண்ணி மகிழ்வோம்.

*"மகனறிவு தந்தையறிவு"*

எனவே, மேனாட்டு மருத்துவத் துறையில் பட்டம் பெற்ற மும்மணிகளும் தமிழ்நாட்டுச் சித்த மருத்துவத்திலே காணப் பெறும் சிறந்த முறைகளையும் படைப்புகளையும் ஆராய்ந்து பிற நாடுகளிலே பரப்புவதிலும், Human Anatomy, Sargery என்னும் ஆங்கில நூல்களை நூற்றாண்டுகட்கு முன்னமே 'டாக்டர் கிறீன்' தமிழாக்கஞ் செய்து வண்ணப் படங்களுடன் வெளியிட்ட 'உடற் கூற்று நூல்', 'அறுவை மருத்துவம்' போன்று மேனாட்டு மருத்துவ நூல்களையெல்லாம் தமிழாக்கஞ் செய்து வெளியிடுவதிலும் முன்வந்து,

*"தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
*மன்னுயிர்க் கெல்லாம் இனிது"*

என்னும் பொய்யாமொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்குதல் வேண்டுமென்பது எனதவா.

வித்துவான் பட்டம் பெற்றுத் திருப்பத்தூர் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகவிருந்த திரு. வரதராசனார்

பி.ஓ.எல்., எம்.ஓ.எல்., பிஎச்.டி. பட்டங்களைப் படிப்படியே பெற்றுப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராக வமர்ந்து, அடுத்துச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி இப்போது மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக வீற்றிருப்பது தமிழ் மக்கள் பெருமைப்படுதற்குரிய தொன்றாகும்.

அங்ஙனமே முதன்முதல் குழந்தைப் பாட்டுகள் எழுதியவர் படிப்படியே சிறுகதைகள், பள்ளிகட்குத் தமிழ் இலக்கண நூல்கள், கண்ணுடையவாழ்வு, திருக்குறள் தெளிவுரை எழுதியும் மொழி நூல், மொழி வரலாறு, சங்க இலக்கியத்தில் இயற்கை, திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், இலக்கிய மரபு, இலக்கிய ஆராய்ச்சி, இலக்கியத் திறன், இலக்கியக் காட்சிகள், நெடுந்தொகைச் செல்வம், குறுந்தொகைச் செல்வம், இலக்கிய வரலாறு ஆகிய ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளனர் என்பதும் எண்ணி எண்ணி இறும்பூதெய்துதற்குரியதாகும்.

1940 சனவரி 19, 20ஆம் நாள்களில் சென்னை, சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ப்பேரறிஞர் திரு வி. கலியாணசுந்தர முதலியார் தலைமையில் 'பத்துப்பாட்டு மாநாடு' நடைபெற்றது. அதனை முன்னின்று நடத்தியவர் பெருமதிப்புக்குரிய பன்மொழிப்புலவர் டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாராவர். அம்மாநாட்டில் வித்துவான் தேர்வில் முதல் வகுப்பில் முதன்மையாகத் தேறி ஆயிர ரூபா பரிசு பெற்ற ஆண்பாற் புலவர் ஐவரும், எம்.ஏ., பட்டம் பெற்ற பெண்பாற் புலவர் ஐவரும் ஒவ்வொரு பாட்டைப்பற்றி மிகவுஞ் சிறப்பாகப் பேசினர். பேராசிரியர் திரு மு. வரதராசனார் ஆற்றிய சொற்பொழிவு திருமுருகாற்றுப்படையைப் பற்றியதாகும். மாநாட்டில் பேசிய அச்சிறந்த சொற்பொழிவுகள் நூலுருவில் வெளியிடப்பெறவில்லை. அவற்றை நூலாக வெளியிட விரும்பிப் பேசிய புலவர் பெருமக்கட்கெல்லாம் தாம்தாம் ஆற்றிய சொற்பொழிவை எழுதித்தருமாறும், அதற்குக் கைம்மாறு வழங்குவதாகவும் கடிதம் எழுதி வேண்டினேன். ஆனல் எனது கருத்து விரும்பியபடி நிறைவேறவில்லை.

சமய இலக்கிய மாநாடுகளில் அறிஞர்கள் நிகழ்த்தும் அரிய சொற்பொழிவுகள் காற்றோடு காற்றாய்ப் போய் விடுகின்றனவே. அவை நூலுருவில் வெளியிடப்பெறின் என்றும் நின்று பயன்தருமே என்று அடிக்கடி நினைப்பதுண்டு. அதன் பொருட்டுத் திட்டம் ஒன்றும் வகுக்கலானேன்.

**அத்திட்டம் வருமாறு :**

> சங்க இலக்கியங்கட்கும், பிற்காலச் சிறந்த இலக்கியங்கட்கும் தமிழ்ப் பேரறிஞர்களின் தலைமையில் தனித்தனி மாநாடுகள் நடத்துதல் வேண்டும். மாநாட்டின் தலைவர் தமது தலைமையுரையினையும் சொற்பொழிவாளர்கள் தாங்கள் எடுத்துக் கொண்ட பொருள்கள் பற்றிய சொற்பொழிவுகளையும் முன்னதாக எழுதித் தருதல் வேண்டும். அங்ஙனம் எழுதப்பெற்று வருபவற்றை முன்னதாகவே சொற்பொழிவு நூலாக அச்சிட்டு மாநாட்டிலே வெளியிடுதல் வேண்டும். அச்சொற்பொழிவுகளின் உரிமை அவரவர்கட்கே உரியதாகும். ஆனால், சொற்பொழிவு நூலாக வெளியிடும் உரிமை மட்டும் அதனை வெளியிடும் கழகத்துக்கு என்றும் உரியது. சொற்பொழிவு நூலின்கண் தலைவர், சொற்பொழிவாளர்களின் உருவப்படங்கள் கட்டாயம் இருத்தல் வேண்டுமெனவும் இதுவே புலவர் படங்களைத் தொகுப்பதற்குச் சிறந்த வழி எனவும் கருதினேன்.

இந்த முறையில் அமைக்கப்பெற்ற திட்டத்தின்படி 1940 மார்ச்சுத் திங்கள் முதல்நாள் சென்னை, கோவிந்தப்ப நாயக்கர் பள்ளியில் 'கலித்தொகை மாநாட்'டைக் கழகம் நடத்தியது. தமிழ்ப் பெரும் புலவர் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் 'கலித்தொகையின் மாண்பு' என்னும் பொருள்பற்றித் தமது தலைமையுரையினை எழுதியனுப்பித் தலைமை தாங்கினார். பேராசிரியர் மு. வரதராசனார் 'மருதக்கலி' என்னும் பொருள்பற்றித் தமது சொற்பொழிவை முன்னதாகவே எழுதி அனுப்பிச் சொற்பொழிவாற்றினர். ஏனைய நான்கு கலிகளைப் பற்றியும் அறிஞர் நால்வர் தத்தம் சொற்பொழிவினை எழுதியனுப்பி மாநாட்டிலே கலந்துகொண்டு சிறப்புற உரை நிகழ்த்தினர். தலைமையுரையினையும் சொற்பொழிவுகளையும் தொகுத்து அச்சிட்டுக் 'கலித்தொகைச் சொற்பொழிவு நூல்' மாநாட்டிலே வெளியிடப்பெற்றது. இதுவே கழகம் வெளியிட்ட முதற் சொற்பொழிவு நூலாகும்.

இதே முறையில் எட்டுத்தொகையில் 'குறுந்தொகை' 'அகநானூறு' முதலிய மற்ற ஏழு நூல்கட்கும், 'பத்துப்பாட்டு' 'பதினெண்கீழ்க்கணக்கு' ஆகிய இரண்டு தொகுப்புகட்கும் ஒன்பது மாநாடுகள் நடைபெற்றுச் சொற்பொழிவு நூல்கள் வெளியிடப்பெற்றன. நெல்லையிலே டாக்டர் திரு. மு. வரத

ராசனார் தலைமையில் 'பத்துப்பாட்டு மாநாடு' 9, 10-2-1952 ஆகிய இரண்டு நாள்களில் நடைபெற்றது. சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமி பிள்ளையவர்கள் திருமுருகாற்றுப் படையைப் பற்றிச் சிறப்புற உரை நிகழ்த்தினர். மற்றும் புலவர் பெருமக்கள் ஒன்பதின்மர் எஞ்சிய ஒன்பது பாட்டுக் களைப்பற்றி உரை நிகழ்த்தினர். இங்ஙனமே அந்தாதி, உலா, கலம்பகம், பரணி, பிள்ளைத்தமிழ், கோவை முதலிய சிற்றிலக் கியங்கட்கு ஆறு மாநாடுகளும், தமிழக வரலாறு, அரசிய லறிவு, பெரியபுராணம் ஆகியவற்றுக்கு மூன்று மாநாடுகளும் நடத்தப்பெற்று ஒன்பது சொற்பொழிவு நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன.

தனித்தமிழ்த் தந்தை மறைத்திரு மறைமலையடிகள் 15—9—1950 இல் இறையடி சேர்ந்தனர். அவர்கள் புகழ் பொதிந்த பொன்னுடல் 16—9—1950 இரவு 7 மணிக்குப் பல்லவபுரம் நன்காட்டில் எரியூட்டப்பெறும் வேளையில் டாக்டர் மு. வரதராசனார் "(அடிகளை) தமிழ்நாட்டின் பொதுச்சொத் தென்று அறிவித்து அரசினர் முன்வந்து அணிவகுப்புகளுடன் அடக்கஞ்செய்திருக்க வேண்டாவா ! தமிழ்நாட்டுக்கு ஒப்பற்ற இலக்கியங்களைத் தந்த கைகள் செயலற்றிருக்கின்றனவே" என்று இன்னோரன்ன விழுமிய கருத்துக்களை உணர்ச்சி ததும்பப் பேசியதைக் கேட்டதும் அங்கே வந்திருந்தவரனைவரும் துயர் தாங்காது வாய்விட்டுக் கதறினர்.

மறைமலையடிகள் மறைவு குறித்து 17—9—1950 மாலை சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு ஜே. சிவசண் முகம் பிள்ளையவர்கள் தலைமையிலும் டாக்டர் மு. வரத ராசனார் உணர்ச்சி பொங்கப் பேசினர்.

மறைமலையடிகள் மறைவதற்குமுன் எழுதியுள்ள விருப்ப ஆவணம் (Will) பற்றிய வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் நடைபெற்றது. அடிகளார் தம் விருப்ப ஆவணத்தைத் தன்னினைவுடன் எழுதவில்லை என்பது வழக்கு. ஆவணம் எழு தப்பட்டபொழுது அடிகளார் தன்னினைவுடன் இருந்தார் என்பதற்கு 14—7—1953இல் நீதிமன்ற நடுவர் மாண்பமை திரு. கே. இராமசாமி கவுண்டர் அவர்கள் முன்பு டாக்டர் மு. வரதராசனார் கூறிய சான்றுரையே வழக்கு வெற்றிபெற வாய்ப்பளித்தது. அதன்வழி டாக்டர் மு. வ. அவர்கள் பொன்றாப் புகழ் பெற்றனர் என்றால் அது மிகையாகாது.

நடுவர் தீர்ப்பில் எழுதியதை இங்கே காண்க.

> "However, the evidence of this doctor (Dr. Srinivasalu Naidu) is not very helpful in regard to the condition of the patient (Swami Vedachalam) on 9—9—1950. As against that evidence, the petitioners have examined Pandit Varadarajan, Tamil Professor in Pachaiappa's College with the qualification of M. O. L., M. A., Ph. D., and who knew the Swamiar since 1928. During his illness this Pandit visited the Swamiar four days prior to his death. He also attended the death of the Swamiar. During that visit, the Pandit introduced to the Swamiar some friends who accompanied him. The Swamiar answered the Pandit's queries regarding his health. The Pandit stayed with the Swamiar for about 10 minutes. The Pandit has given evidence that the swamiar was able to understand things and was fully conscious. In this state of evidence, I am not convinced that the Swamiar must have been in a comatose condition or was not possessed of mental faculties at the time when he executed his will."

1954ஆம் ஆண்டில் டாக்டர் வரதராசனார் தாம் பெருமதிப்பு வைத்திருந்த செந்தமிழ்ச் செம்மல் திரு. வி. கலியாணசுந்தரனார் பெயரில் அறக்கட்டளை நிறுவும்பொருட்டுத் தம்மைப் பேசுதற்கு அழைப்பவர் பேச்சு ஒன்றுக்கு ரூபா நூறு வழங்குதல் வேண்டுமென்று திட்டம் ஏற்படுத்தியிருந்தனர். எனவே, யான் அவர்களை நெல்லைக்கு 21—3—1954 இல் வரவழைத்துச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றச்செய்து ரூபா நூறு திரு. வி. க. நிதிக்காக வழங்கினேன். நெல்லை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் தலைமையாசிரியர் திரு. இரா. பாலகிருட்டிண முதலியார் (பி. ஏ., எல். டி.) தமது பள்ளியில் பேசுமாறு டாக்டர் மு. வ. அவர்களை அழைத்தனர். 22—3—1954 மாலை 4 மணிக்கு டாக்டர் மு. வ. அவர்கள் ஆற்றிய பேச்சு அரசியலைப் பற்றியதாக அமைந்து ஆசிரிய மாணவர் உள்ளங்களில் பேருணர்ச்சியினைக் கிளறி விட்டது. அவர்கள் எந்தத்துறையிற் புகுந்தாலும் அந்தத்துறை அவர்களால் சிறப்படையும் என்பதை

அன்று கருதலானேன். அஃது இன்றுவரை மெய்யாகி வருதலைக் கண்டு பெருமகிழ்வடைகின்றேன்; வாழ்த்து கின்றேன்.

1970 திசம்பர் இறுதியில் சென்னையில் நிகழ்ந்த நான்காவது தேசிய புத்தகக் காட்சி விழாவிலே ஒருநாள் பல்கலைக் கழகத் தேர்வு மண்டப மாடியில் 'எழுத்தாளர் கருத்தரங்கு' நடைபெற்றது. தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளராகிய டாக்டர் மு. வரதராசனார் எழுத்துலகிற் கண்ட தமது பட்டறிவினைப் பற்றிப் பேசினார். அவர் பேசத் தொடங்கியபோது "இதோ எதிரே அமர்ந்திருக்கும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைத்திரு வ. சுப்பையா பிள்ளையவர்கள்தாம் நூல்கள் எழுதுமாறு முதன்முதல் என்னை ஊக்கியவராவர்" என்று கூறினர்.

மேலே கூறப்பெற்ற செய்திகளைக் கொண்டு சிறிது தமிழ் கற்றார்க்கும் எளிதில் பொருள் விளங்குமாறு தெய்வத் திருமறையாந் திருக்குறளுக்குத் தெளிவான உரை எழுதக் கூடிய தகுதியுந் திறமையும் டாக்டர் மு. வரதராசனார்க்குத் தான் உண்டு என்று யான் கருதியதில் வியப்பில்லையன்றோ!

இனி அவர்கள் எழுதிய திருக்குறள் தெளிவுரையைப் பற்றிய குறிப்புகளைக் கண்டு மகிழ்வோம்.

யானும் அப்பர் அச்சக மேலாளர் திரு சி. மு. கோவிந்தராச முதலியாரும் திருக்குறள் தெளிவுரையினை 13/9 செ. மீ. அளவில் கையடக்கப் பதிப்பாக அச்சிடுதல் வேண்டுமென்றும் உரையினை முதற்கண் படித்துப் பொருளுணர்ந்தவர் பின் குறளைப் படிப்பதாயின் குறள் எளிதிலே மனப்பாடமாகும் என்று கருதி இடப்பக்கம் உரையும் வலப்பக்கம் குறளும் ஆக ஒரே பார்வையில் உரையினையும் குறளையும் படிக்கும் வகையில் எதிரெதிரே அமைத்தல் வேண்டும் என்றும் விரும்பினோம். போலிகையாக உரையினை 3 வரிகளில் 8 புள்ளி ரோமன் எழுத்திலும், குறட்பாவை 2 வரிகளில் 8 புள்ளி தடித்த எழுத்திலும் அடுக்கி எதிர்எதிரே அமைத்து மெய்ப்பினை எடுத்துக்கொண்டு டாக்டர் மு. வரதராசனார் இல்லத்துக்குச் சென்றோம். அப்போது அவர் சேத்துப்பட்டு கந்தப்பிள்ளை தெரு 32 ஆம் எண் வீட்டு மாடியில் குடியிருந்தனர். யாவரும் புரிந்து கொள்ளும் வகையில் திருக்குறளுக்குத் தூய எளிய இனிய தமிழ் நடையில் தெளிவுரை எழுதித் தருமாறும் அதனை எழுதக் கூடிய திறமை தங்களிடமே உள்ளது என்றுங் கூறி அவரிடம் மெய்ப்பினைக் காட்டினோம். அதனைப் பார்வையிட்டு வியந்து

போற்றி எங்கள் விருப்பப்படி உரை எழுதித் தருவதாக ஒப்புதல் தெரிவித்தனர். ஒரு கிழமையில் அறத்துப்பால் முழுமைக்கும் உரை எழுதித் தந்தனர். அதனை அச்சுக் கோத்துப் பக்கங்கட்டி மெய்ப்பினை எடுத்தபோது ஒருசில குறட்பா உரை 4 வரிகளிலும் ஒருசிலவற்றின் உரை 2 வரிகளி லுமாக இருந்தன. 4 வரிகளில் உள்ள உரையில் சில சொற்களை நீக்கித் திருத்திப் பொருட்சிறப்புக் கெடாமல் 3 வரிகளில் அமைத்தும், 2 வரிகளில் உள்ள உரையில் சில சொற்களைச் சேர்த்துப் பொருள் கெடாமல் 3 வரிகளில் அமைத்தும் தந்தனர். அங்ஙனமே நூல் முழுமைக்கும் அவர் எழுதித் தந்த உரையின் மெய்ப்பினைத் திருத்தித் தந்தனர். நூல் முழுமையும் புத்தம்புதிய அச்செழுத்துக்களில் பிழை யில்லாமல் அச்சிடப்பெற்றது. மூவண்ணங்களில் மேலுறையும் ஓவியந் தீட்டிய உள்பக்கத்தாளும் அழகியவாய் அச்சிட்டு நூல் கட்டடஞ் செய்யப்பெற்றது. அதற்கு ரூ. 1-25 குறைந்தவிலை வைக்கப்பெற்றது. அதனைத் துணிக் கட்டடஞ் செய்து மூவண்ண மேலுறை இட்டு ரூ. 1-75 விலை வைக்கலாயிற்று. 25 படிகட்கு மேல் 50 படிகள் வரை வாங்குபவர்கட்கு 25% கழிவும் 50க்குமேல் வாங்குபவர்கட்கு 30% கழிவும் கொடுக்கப் பெற்றன. பள்ளி ஆசிரியர்களும் புத்தக வணிகர்களும் நூற்றுக் கணக்கான படிகளை வாங்கி விற்று வரலாயினர். செல்வர்கள் திருமண நினைவுக் குறியாகவும் அதனை வாங்கி வழங்கி வரலாயினர்.

1958இல் கோவையில் நடைபெற்ற 6 ஆவது மாநாட்டில் அனைத்திந்திய அச்சகக் குழுவினர் திருக்குறள் தெளிவுரை பரிசுப் பதிப்புக்குப் பாராட்டிதழும் பரிசும் வழங்கியுள்ளனர்.

1967இல் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டு ஆட்சிக்கு வந்தபோது என் பெருமதிப்புக்கும் பேரன்புக்குமுரிய மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியனவர்கள் கல்வி அமைச்ச ராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். அவர் விரும்பியபடி தமிழகத்திலேயுள்ள மூன்று பல்கலைக் கழகங்களின் பட்ட மளிப்பு விழாக்களில் பட்டம்பெறும் மாணவர்கட்குத் திருக்குறள் தெளிவுரை பரிசாகத் தெய்விகப் பேரவையினரால் 1967, 1968, 1969 ஆகிய மூன்று ஆண்டுகள் தொடர்பாக வழங்கப் பெற்றன. அவ்வகையில் 20,000 படிகள்வரை அளிக்கப் பெற்றன.

பட்டப் பரிசு நூலுக்குத் தெய்விகப் பேரவை முத்திரை அமைத்து மூவண்ணங்களில் வேறு மேலுறை அழகாய் அச்சிடப்பெற்றது. நூலின் உட்புறம் ''சென்னைப் பல்கலைக் கழகம், பட்டமளிப்பு விழாவிலே, பட்டம் பெற்றவர்க்குத் தமிழ்நாடு தெய்விகப் பேரவை, 'கசடறக் கற்று' அதன்படி நடக்கவென அறிவுறுத்தி அளிப்பது, உலகப் பொதுமறையாம், திருக்குறள் தெளிவுரை 26—9—1967'' என்று அச்சிடப்பெற்ற வண்ணத்தாள் ஒட்டப்பெற்றது. அத்தாளின் அடியில் கோடிட்டு, பெற்றவர் தமது பெயரைக் கோட்டின்மேல் எழுதிக் கொள்ள எனவும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

1970ஆம் ஆண்டில் தவத்திரு குன்றக்குடியடிகளார் தெய்விகப் பேரவைத் தலைவராக வந்தபின் தேவாரம், திருவாசகம் போன்ற சைவசமய நூல்களை வழங்குதல் வேண்டு மென்று விரும்பிப் பட்டமளிப்பு விழாக்களிலே திருக்குறள் தெளிவுரை பரிசு வழங்கப் பெறுவதை நிறுத்திவிட்டனர். எந்நாட்டினர்க்கும், எம்மொழியினர்க்கும், எச்சமயத்தி னர்க்கும், எக்காலத்துக்கும் ஏற்றதாகிய திருக்குறளைத் தவிர பட்டமளிப்புப் பரிசுக்குகந்ததொரு வேறு எந்தத் தமிழ் நூலும் இல்லை என்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய தொன்றாகும்.

1948 முதல் 1970 வரை திருக்குறள் தெளிவுரைக்கு ஒரே விலைதான் வைக்கப்பெற்று விற்று வரலாயிற்று. 1970இல் தாள் விலை மிகவும் உயர்ந்து விட்டமையாலும், அச்சுக்கூலி, கட்டுக்கூலி முதலியன உயர்ந்துவிட்டமையாலும் அதன் விலையினை ரூ. 1·50 ஆக உயர்த்த வேண்டியதாயிற்று.

திருக்குறள் தெளிவுரைக்குப் போட்டியாகத் தமிழ்நாட்டில் திருக்குறள் கருத்துரை, திருக்குறள் எளியவுரை, திருக்குறள் தெளிவு, திருக்குறள் தெளிவான உரை முதலிய நாலைந்து நூல்கள் வெளிவந்தன. எனினும், 1948 முதல் இதுகாறும் திருக்குறள் தெளிவுரையில் 8 நூறுயிரம் படிகள் விற்கப் பெற்றுள்ளன என்பது பெருமைப்படக்கூடிய ஒரு பெரும் வெற்றிப் பணியேயாகும்.

**திருக்குறள் அறம்**

1968 அக்டோபர்த் திங்கள் சென்னையில் நடைபெற்ற கழகத்தின் திருவள்ளுவர் பெருவிழாவிலே தமிழர்க்கு அழியாப் புகழ்தேடித்தரும் உலகப் பொதுமறையாந் திருக்குறளுக்கு

வள்ளுவர் அறநெறி நிலைத்து நின்று பரவும் வகையில் எளிய இனிய தெளிவான தூய தமிழ் நடையில் 'திருக்குறள் தெளிவுரை' என்னும் நூலை எழுதித் தமிழ்மக்களிடையே பரப்பச் செய்துள்ள சீரிய தொண்டைப் பாராட்டும் பொருட்டுக் கழகத்தின் அறநிலையங்களுள் ஒன்றாகிய தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின்வழி டாக்டர் மு. வரதராசனார் பெயரில் திருக்குறள் பரிசுத் திட்டம் நிறுவப் பெற்றது.

**அத்திட்டம் வருமாறு :**

''ஆண்டுதோறும் தமிழ்ப் பேரறிஞர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் திருக்குறளைப் பற்றி ஆய்வு நூல் எழுதச் செய்வது. அவர் எழுதித் தரும் ஆய்வு நூலை அழகுற அச்சிடுவது. நூல் அச்சிடப் பெற்றதும் டாக்டர் மு. வ. பரிசுச் சொற்பொழிவு விழா நிகழ்த்தி, அந்நூற் பொருளைப் பற்றி விழா நாளிற் காலையில் ஒரு மணி நேரமும், மாலையில் ஒருமணி நேரமும் அதன் ஆசிரியர் பேசுதல் வேண்டும். விழாத் தலைவர் தலைமையுரை நிகழ்த்தியதும் ஆசிரியர் தமது நூலிற்கண்ட பொருள்களை யொட்டிப் பேசுவர். அவர் பேசியதும் அறிஞர் பெருமகனார் ஒருவர் அந்நூலைப் பற்றிப் பாராட்டிப் பேசி அதனை வெளியிடுவர். மாலையில் ஆசிரியர் பேசியதும் பரிசுத் தொகை ரூபா ஐந்நூறுக்குரிய காசோலை அவர்க்கு வழங்கப்பெறும். மேலும் அந்நூல் விற்பனையிலும் பதிப்புகள்தோறும் ஆறு திங்கட்கொருமுறை நூற்றுக்குப் பத்து விழுக்காடு ஊதியம் (ராயல்டி) சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் ஆசிரியர்க்கு அளித்துவரப்பெறும்.''

இப்பரிசுத் திட்டத்தின்கீழ் 'திருக்குறள அறம்', 'திருக்குறள் பொருள்', 'திருக்குறள் இன்பம்' என்னும் முப்பால்களைப் பற்றியே முதல் மூன்று பரிசுச் சொற்பொழிவு நூல்கள் அமைதல் வேண்டுமென்று திட்டமிடப்பெற்றது.

'திருக்குறள் அறம்' பற்றி ஆய்வு நூல் எழுதிப் பேசுவதற்கு ஆசிரியர் மறைத்திரு மறைமலையடிகளாரின் மாணவர்களுள் தலைசிறந்தவரும், பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் பிற்கால இலக்கண இலக்கியங்களிலும், சைவசமய நூல்களிலும் சிறந்த புலமையுடையவரும், தனித்தமிழின்பால் மாறா நாட்டங் கொண்டவரும், முன்பு சென்னைக் கழக நிலையத்திலே இருமுறை பதிப்பாசிரியராக வமர்ந்து அரிய நூல்கள் சிலவற்றை இயற்றியவருமான மாம்பாக்கம் திருக்குறள்பீடம் குருகுலம் தவத்திரு அழகரடிகளே தகுதியுடையவராவர் என்று கருதி

அவர்கட்கு எழுதி வேண்டினேன். அவர்கள் மனமுவந்து ஒப்புதல் தெரிவித்தனர். அதைக்கேட்ட டாக்டர் மு. வரத ராசனூர் 'திருக்குறள் அறம்' பற்றி ஆய்வு நூல் எழுதுவதற்கு அழகரடிகளே மிகவும் பொருத்தமானவர் எனச் சொல்லி மகிழ் வுற்றனர்.

திருக்குறள் அறம் பற்றி ஆய்வு நூல் எழுதிப் பேசுவ தற்குத் தவத்திரு அழகரடிகளே மிகவும் பொருத்தமானவர் எனத் தேர்ந்தெடுக்கலாயினமை ஏன் என்பதை ஈண்டு விளக்கி எழுத வேண்டுவது இன்றியமையாததாகும்.

திரு. தி. சு. பாலசுந்தரம் அவர்கள் கழகப் புலவராக வருமுன் மதுராந்தகம் பக்கமுள்ள சிற்றூரின்கண் தொடக்கப் பள்ளியாசிரியராக விருந்தார். அங்ஙனமிருக்கையில் விடுமுறை நாள்களில் பல்லாவரம் போய் மறைத்திரு மறைமலையடிகளா ரிடம் இலக்கண இலக்கியங்கள் சிலவற்றைப் பாடங்கேட்டு வந்தனர். தொடக்க நாள்களிலேயே அவருடைய நுண்மாண் நுழைபுலமைத் திறத்தினை அடிகளார் வியந்து பாராட்டுவா ராயினர். என் அருமைத் தமையனூர் திருவரங்கனூர் 1927 செப்டம்பர்த் திங்களில் அடிகளாரின் திருமகளார் தனித்தமிழ்த் திருவாட்டி நீலாம்பிகையாரை மணந்து கொண்டபின் அடிக ளார் பரிந்துரைத்ததன்பேரில் திரு. பாலசுந்தரம் 1927 திசம்பரில் கழகப் புலவராக அமர்த்தப்பெற்றூர். செந்தமிழ்ச் செல்வி இதழாசிரியர் குழுவில் ஓர் உறுப்பினராக விருந்து செல்விக் கட்டுரைகளை மேற்பார்வையிட்டு அமைத்தும், தாமே கட்டுரைகள் எழுதியும் வந்தனர்.

கழகப் புலவராக வரும்போது பெற்ருேரால் இடப்பெற்ற 'பாலசுந்தரம்' என்னும் வடமொழிப் பெயர் தாங்கியிருந்தவர் கழகத்தின் பதிப்பாசிரியரான பின் சில திங்களில் மறைமலையடி களார் தனித்தமிழ்க் கொள்கைக்கேற்பத் தமது பெயரை 'இள வழகனூர்' என்னுந் தூய செந்தமிழ்ப் பெயராக மாற்றியமைத்துக் கொண்டனர். 1945இல் கழகப் பணியினின்றும் விலகிச், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டச் சார்பிலும், இறைபணி மன்றச் சார்பிலும் திருமந்திர விரிவுரை, மெய்கண்ட நூல்கள் பதினன்கையும் பற்றிய விரிவுரை, பெரியபுராண விரிவுரையாற் றிச் சமயத் தொண்டு புரிந்து 1960இல் மதுராந்தகத்தில் திருக்குறள் பீடம் அமைத்து மாம்பாக்கம் குருகுலத் தலைவராகும் போது சிவதீக்கை பெற்று 'அழகரடிகள்' ஆனூர் என்பது குறிப் பிடத்தக்கது. (தொடரும்)

—வ. சுப்பையா

# இறைமையில் இசைந்த வாழ்வு

[திரு. மா. சண்முகசுப்பிரமணியம்]

(சிலம்பு சஎ, பரல் ரு பக்கம் உகூஅ இன் தொடர்ச்சி)

## ஒழுக்கமும் உயர்புகழும்

"இறைமை எல்லாவற்றையுங் காண்கின்றது, எல்லாவற்றையும் அறிகின்றது."
—முண்டக உபநிடதம்.

"நீ செய்வதனைத்தையும் நிச்சயமாக அல்லா பார்த்துக்கொண்டிருக்கிறார்."

—புனிதக்குரான் (அத் 2: 110)

**உயிரினும் மேலானது ஒழுக்கம் :**

*"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்*
*எய்துவர் எய்தாப் பழி"* (குறள் - 137)

ஒழுக்கமாக வாழ்கின்றவர் உயர்ந்த புகழைப் பெறுகின்றனர். ஒழுக்கத்திற்கு மாறான இழுக்கத்தில் இறங்குபவர் இழிந்த பழிச்சொல்லுக்கு ஆளாகின்றனர்.

*"புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்*
*உலகுடன் பெறினுங் கொள்ளலர்......"* (புறம் - 182)

உயிரைக் கொடுத்தும் புகழைப் பெறுதல் வேண்டும், உலகமுழுதுங் கிடைத்தாலும்கூடப் பழிச்செயலை ஒதுக்க வேண்டும் என்ற உறுதி படைத்தவர்கள் இருப்பதால்தான் உலகமே உள்ளது என்று சங்க காலச் சான்றோர்கள் பாடியுள்ளனர். உயிரைக் கொடுத்தாவது புகழைப் பெற வேண்டும் என்பது உயர்நெறி. எனவே தான், புகழைத் தரும் ஒழுக்கத்தை உயிரைவிடச் சிறந்ததாகப் போற்ற வேண்டும் என்கிறது அறநூல் :

*"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்"* (குறள் - 131)

நம் உயிரினும் சிறந்ததான இந்த ஒழுக்கம் என்பது என்ன?

**ஒழுங்கான வாழ்வே ஒழுக்க வாழ்வாகும் :**

எவருடைய நலனுக்கும் ஊறு விளைக்காமல் எல்லாருடனும் இசைந்து வாழ்வதுதான் ஒழுங்கான வாழ்வாகும், ஒழுக்கமாகும்.

பிறருக்குக் கேடு விளைவிக்கும் செயல்களனைத்துமே ஒழுக்கத்திற்கு மாறான செயல்கள் ஆகின்றன. பிறருடைய இன்பத்திற்கு முரணான செயல்களை இழுக்கச் செயல்கள் என்கின்றோம். பிறரது பொருளைத் திருடினால் பொருளை இழந்தவருக்குக் கேடு விளைகின்றது. பிறருக்குத் தீங்கு இழைத்தால் தீங்குற்றவர் துன்பப்படுகின்றார். எனவே, திருடுவதும் தீங்கிழைத்தலும் ஒழுக்கத்திற்குமாறான செயல்கள். பொய் பேசுவதால் பிறர் ஏமாற்றப்படுகின்றனர்; புறங்கூறுவதால் பிறர் மனம் புண்படுகின்றது. எனவே, பொய்யுரையும் புறங்கூறலும் இழுக்கத்தின்பாற்படுகின்றன.

பிறர் நலம் பேணி வாழ்வோர் பிறரோடு இசைந்து வாழ்கின்றனர். பிறருடைய உரிமைகளுக்கு ஊறு விளைக்காமல், இன்பத்திற்கு இடையூறு இன்றி வாழ்வதே இசைந்து வாழ்தல் ஆகும். இவ்வாறு, இசைந்து வாழும் ஏற்றம் வெறும் கல்வியறிவால் மட்டுமே வந்துவிடுவதில்லை. உலகத்தோடு ஒட்டி ஒழுகும் உயர்ந்த பண்பு ஏட்டுக் கல்வியால் எய்தப்படுவது அன்று.

> *''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
> *கல்லார் அறிவிலா தார்.''* (குறள் - 140)

ஒருவன் தனக்கு இன்பம் கிடைப்பதாக எண்ணிக்கொண்டு அடுத்துவனுக்குத் துன்பம் விளைவிக்கும்பொழுதுதான் ஒழுக்கம் தவறுகின்றது. பிறர் துன்பத்தில் நம் இன்பத்தைக் காண முயலுவது எவ்வளவு அறியாமை! இந்த அறியாமையை நூலறிவு போக்குவதில்லை. மெய்யறிவால்தான் இந்த அறியாமையைப் போக்க இயலும்.

மெய்யறிவு பெற்றவன் தன் இன்பம் வேறு, பிறர் இன்பம் வேறு என்று பிரித்துப் பார்ப்பதில்லை. அனைவருமே இறைமை இணைப்பால் உறவுடையோராக இருக்கும்பொழுது, ஒருவரது துன்பம் மற்றவரது இன்பமாக எப்படி மாற முடியும்? இறையுணர்வு பெற்றவர்கள் பிறர் துன்பத்தைத் தம் துன்பமாக உணருகின்றனர். அதனால்தான்,

> *''எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல்*
> *வேறொன்றறியேன் பராபரமே......''*

என்று கூறுகின்றனர் இறையுணர்வினை இதயத்தில் கொண்டவர்கள்.

பிறர் இன்பத்தையும் தன் இன்பமாகக் காணும் பெற்றிமையை நாம் இறையுணர்வால்தான் எய்துகின்றோம். எனவே, உலகத்தோடு ஒட்டி ஒழுகும் உயர்ந்த பண்பிற்கு அடிப்படையாக அமைகின்றது இறையுணர்வு.

*   *   *   *

மனச் சான்று :

ஒழுக்கம் தவறி நடப்பவர்கள் புகழ் எய்துவதில்லை, பழியே அவர்களைச் சேருகின்றது எனக் கண்டோம்.

புகழும் அதற்கு மாறான பழியும் எவ்வாறு பிறக்கின்றன?

பிறர் நம்மைப் பற்றிப் பெருமையாக எண்ணுவதையும் பேசுவதையும் புகழ் என்கின்றோம்; நம்மைக் குறித்து அயலார் இழிவாகப் பேசுவதைப் பழி அல்லது இகழ் என்கிறோம். நம் செயல்கள் பிறருக்குத் தெரிந்தால்தானே அவற்றால் புகழோ இகழோ பிறக்கின்றது? எவருக்குமே தெரியாத வகையில் நாம் ஒழுக்கத்திற்கு மாறான செயல்களைச் செய்து விட்டால் நமக்குப் பழி ஏற்படும் என்ற அச்சம் நமக்கு வேண்டாமே? நாம் குற்றம் ஏதேனும் செய்தால்கூட நாம்தான் அக்குற்றத்தை இழைத்தோம் என்பது பிறருக்குத் தெரிந்தால் தானே நம் மீது குற்றம் சாட்டப்படுகின்து? எவருக்குமே தெரியாமல் ஒழுக்கத்திற்கு மாறான செயல்களையோ குற்றங் களையோ செய்துவிட்டால், பழியென்றோ தண்டனையென்றோ நாம் அஞ்ச வேண்டாம். இந்த எண்ணத்தில்தான் பலரும் பழிச் செயல்களில் துணிந்து இறங்குகின்றனர்.

இந்த எண்ணத்தைப் போக்குவது எப்படி?

குற்றம் செய்தவர்களுக்கான தண்டனைகளைக் குற்றஇயல் சட்டம் கூறுகின்றது. திருடுவது ஒரு குற்றமான செயலாகும். நம்மில் பெரும்பாலானோர் திருடுவதில்லை என்றால் அதற்குக் காரணம் என்ன? தண்டிக்கும் சட்டத்திற்கு அஞ்சியா? இல்லை. நம்முடைய மனச்சான்றே கூறுகின்றது, திருடுவது ஒழுக்கத்திற்கு மாறான செயல், அதைச் செய்வது கூடாது என்று. நம் மனச்சான்றுக்கு அஞ்சியே நம்மில் பலரும் இழுக்கான செயல்களில் இறங்காமல் இருக்கின்றோம்.

இந்த மனச்சான்று என்பது என்ன?

**உள் நின்றுணர்த்தும் ஒளி :**

நம்மில் ஒவ்வொருவருமே உணருகின்றோம் எது நல்லது, எது தீயது என்பதை. தீமையானதைச் செய்வது கூடாது

என்பதையும் நம் உள்ளம் உணர்த்துகிறது. இவ்வாறு நல்லது எது, தீயது எது என்பதைக் காட்டித் தீயனவற்றைச் செய்ய வேண்டாம் என்று ஒரு மெல்லிய குரலெழுகின்றதே நம் மனத்தின் அடித்தளத்திலிருந்து அதைத்தான் மனச்சான்று என்கிறோம். நம் உள்ளத்துள் நின்று உயர்நெறியினை உணர்த்தும் இந்த ஒளியினையே மனச்சான்று என்கிறோம்.

மனிதராகவுள்ள அனைவருக்குமே இந்த மனச்சான்று இருக்கின்றது, ஆயினும், இம்மனச்சான்றின் குரலைப் பொருட்படுத்தாமல் விட்டு விடுகின்றோம். மனச்சான்றினைப் புறக்கணித்துவிட்டு மனச்சான்றுக்கு மாறான செயல்களில் மனிதன் இறங்கிவிடுகின்றான். இதற்குக் காரணம் மனச்சான்றின் மாண்பினை, அதன் உண்மைத் தன்மையினை அவன் உணராததேயாகும்.

நம் இதயத்தில் இசைந்துள்ள இறைமைதான் நன்மை தீமைகளைக் காட்டும் உள்ளத்து ஒளியாக ஒளிர்கின்றது. இறைமை என்ற உண்மையொளி நம் உள்ளத்தில் ஒளிர்வதால் தான் நன்மை எது, தீமை எது என்பதை நாம் தெளிவாக உணருகின்றோம்.

> *"நானேதும் அறியாமே என்னுள் வந்து*
> *நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்"*
>
> *(திருநாவுக்கரசர். திருவானைக்கா - திருத்தாண்டகம் பக்கம் - 123)*

என்று இறைமையை ஏத்துகின்றனர் அடியார்கள்.

நன்மை எது, தீமை எது என்று உணர்த்தும் உணர்வினை நீதியுணர்வு என்கின்றோம். உள்ளத்திலே உறைந்திடும் இறையுணர்வினை நெஞ்சிலே நிற்கும் நீதியுணர்வாகவே காணுகின்றனர் அடியார்கள்:

> *"நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் நீதியே"*
>
> *—நாவுக்கரசர். பொது. (பக்கம் - 503)*

நீதி என்பதை ஒரு தெய்வப்பண்பாகவே நாம் கொள்ளுகிறோம். நம் மனத்திலே உள்ள இறைமையை நீதி என்ற சொல் நினைப்பூட்டுகின்றது.

> *"நீதியால் நினைப்புளானை நினைப்பவர் மனத்துளானை"*
>
> *—நாவுக்கரசர். பொது (பக்கம் - 481)*

நமக்கு எது இன்பமளிக்கின்றதோ அதுவே பிறருக்கும் இன்பமாகின்றது, நமக்குத் துன்பம் பயப்பது பிறருக்கும்

துன்பமேயாகிறது என்ற உண்மையை உணர்ந்து, "சமன் செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்து ஒருபாற் கோடாது" நாம் செயலாற்றுவதை "நடுவு நிலைமை" என்பார்கள். 'இறைமை' என்ற சொல் நடுவு நிலைமைப் பண்பினையும் குறிப்பதாகும். இறையுணர்வுள்ள இதயம் நடுவு நிலையுணர்வுள்ளதாகவே இருக்கும் என்பதனை இது காட்டுகிறது.

**உள்ளப் பிழைகள் :**

நம் செயல்களுக்கெல்லாம் மூலமாக உள்ளது சிந்தனை. எனவே சிந்தனை தூயதாக இருத்தல் வேண்டும். நம் செயல்களைத் திருத்தலாம் சமுதாயச் சட்டதிட்டங்கள். ஆனால் சிந்தனையைத் திருத்துவது எப்படி? இறையுணர்வுதான் நம் சிந்தையைத் திருத்துகின்றது.

*"சீரருளாற் சிந்தனையைத் திருத்தியாண்ட சிவலோகா"*

*—(திருவாசகம் - பிரார்த்தனைப் பத்து)*

அகத்திலே எழும் பிழைகள்தாம் பிறகு, பிழைச்செயல்களாக உருவெடுக்கின்றன. எனவே, தூய்மையற்ற சிந்தனையே தீமையாகி விடுகின்றது. உள்ளத் தூய்மையை உணர்த்தும் வகையில் ஒலிக்கின்றன இயேசுநாதரின் இன்முறைப் போதனைகள்.

"பிறன்மனை நயத்தல் பெரும் பழியாகும். ஆனால், வேறொரு பெண்ணை விரும்பி நோக்குதலே பிறன்மனை நயக்கும் பழிச்செயல் ஆகிவிடும் என்று நான் கூறுகிறேன்"

*—(மாத்யூ - 5)*

"மனிதனை மாசுபடுத்துவது புறப்பொருள்கள் அல்ல, அவன் இதயத்திலே எழும் இழுக்கான எண்ணங்கள்தாம்.

"ஏமாற்றுதல், வஞ்சகம், திருட்டு, கொலை, பேராசை, புறங்கூறுதல், அகந்தைபோன்ற தீமைகளெல்லாம் மனிதனின் மனத்திலே தோன்றித்தான் அவனை மாசுபடுத்துகின்றன"

*—(மார்க் - 7)*

இவ்வாறு, உள்ளத்தூய்மையின் உயர்வு கூறப்பட்டுள்ளது.

நாம் என்ன நினைக்கின்றோம்? நம் மனத்திலே நிழலாடும் எண்ணங்களை எவர் அறிவார்? எனவே, அவ்வெண்ணங்கள் தீயனவாக இருந்தால்தான் என்ன? இவ்வாறு நாம் கருதுகிறோம்.

உண்மைதான். தீயஎண்ணங்களுக்காக மட்டுமே எவரையும் தண்டிக்கும் சட்டம் இல்லை. தீயசிந்தனை தீயசெயலாக வெளிப்பட்ட பிறகுதான் சட்டம் செயல்படுகின்றது.

ஆனால், ஒழுக்கம் வேறு, சட்டம் வேறு.

செயலைத் திருத்துகிறது சட்டம், சிந்தனையைத் திருத்துகிறது ஒழுக்கம். சட்டம் உடலாற் செய்யும் பிழைகளைத் தடுக்கின்றது, ஒழுக்கமோ உள்ளத்தாற் செய்யும் பிழைகளைத் தடுக்கின்றது.

நம் உள்ளத்திலே உறையும் இறைமை நம் உள்ளப் பிழைகளையும் உன்னிப்பாகக் கண்டுகொண்டுதா னிருக்கிறது என்பதைச் சான்றோர் அறிவார்கள். எனவே, உள்ளப் பிழைகளைப் பொறுத்திடுமாறு இறைமையை வேண்டுகின்றனர்.

"பேயேனது உள்ளப்பிழை பொறுக்கும் பெருமையனே"
—(திருவாசகம் - திருக்கோத்தும்பி)

இறையுணர்வு பெற்றோர்கள் சிந்தனைத் தூய்மையினை எவ்வளவு சிறந்ததெனக் கொண்டார்கள் என்பது தெளிவாகும்.

சமுதாயச் சட்டங்களால் தீயஎண்ணங்களைத் தடுக்க முடிவதில்லை; அவை தீயசெயல்களையே தடுக்கின்றன. தீச்செயல்களுக்கு மூலமான தீயஎண்ணங்களைத் தடுக்கும் ஆற்றல் சட்டங்களுக்கு இல்லாததால் சட்டங்கள் வலியிழந்து நிற்கின்றன. இந்நிலையில், உள்ளத்தைத் திருத்தும் ஒழுக்கவுணர்வே சட்டத்தைவிட உயர்ந்ததாகின்றது. சட்டங்களால் சாதிக்க இயலாததை ஒழுக்கவுணர்வு சாதிக்கின்றது. செயலுக்கு மூலமாகச் சிந்தனை இருப்பது போல், ஒழுக்கவுணர்வுக்கு மூலமாக இறையுணர்வு இருக்கின்றது. இறையுணர்வில் இலங்குவதே ஒழுக்கவுணர்வாகும்.

"உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்" —(குறள் - 282)

வஞ்சனையால் பிறர் பொருளைப் பெற்றுவிடலாம் என்று எண்ணுவதே தீமையானது என்கிறது அறநூல். வஞ்சனையான எண்ணங்களால் எழும் கேடுகள் எண்ணிறந்தவை. வளரும் வஞ்சக எண்ணங்கள் வற்ற வேண்டுமானால் நெஞ்சிலே இறையுணர்வு நிலைக்க வேண்டும். நெஞ்சினால் இறைமையை நினைந்ததும் வஞ்ச ஆறுகள் வற்றிவிட்டன என்கின்றனர்.

*"நெஞ்சினுல் நினைந்தேன் நினைவெய்தலும்*
*வஞ்ச ஆறுகள் வற்றின காண்மினே"*
—(நாவுக்கரசர் - திருஆமாத்தூர்)

கள்ளம் நிறைந்த உள்ளத்தில் இறைமை ஒளிந்து கொள்ளுகிறது; கரவு இல்லாத இதயத்தில்தான் இறைமை ஒளி விடுகின்றது.

*"கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்*
*விரவாடும் பெருமானை...........*
—(நாவுக்கரசர் - திருக்கச்சியேகம்பம், பக்கம் - 421)

இறையுணர்வு இருந்தால் இருண்ட எண்ணங்களுக்கு இடமில்லை என்பதை இவ்வாறு கூறுகின்றனர் மெய்யடியார்கள்.

நம் உள்ளத்திலே தீய எண்ணங்கள் உதிப்பதால்தான் தீமையான செயல்கள் உருவெடுக்கின்றன. தீமையான செயல்களுக்கு மூலமான தீய எண்ணங்களைத் தடுக்கும் ஆர்வம் நமக்கு இருப்பதில்லை. காரணம், நம் உள்ளத்தின் கள்ள எண்ணங்களைக் காண்பார் எவருமில்லை என்று நாம் கருதுவது தான். ஒருவர் உள்ளத்து எண்ணங்களைப் பிறர் காண்பது இயலாது என்பது உண்மைதான். ஆனல், உள்ளத்திலே உறையும் இறைமைக்கு உள்ளத்தின் எண்ணங்கள் தெரியாமலா போகும்? இறையுணர்வு பெற்ற நாம் இதனை நன்கு உணருகின்றோம்.

**கள்ளச் சிந்தனைகளுக்குக் கண்காணி :**

நம்மைப் பலரும் பார்த்துக் கண்காணித்துக்கொண்டிருக்கும் பொழுது இழிவான செயலிலே நாம் இறங்குவோமா? மாட்டோம். இதுபோல், நம் உள்ளந்திலே நின்று உன்னிப்பாகக் கண்காணிக்கும் ஒப்புயர்வற்ற ஆற்றல் ஒன்று உண்டு என்ற உண்மையினை நாம் உணர்ந்துகொண்டால் நம் உள்ளத்திலே கள்ள எண்ணங்கள் எவ்வாறு எழும்?

இந்த உண்மையை உறுதிபடக் கூறுகின்றது ஒரு ஞானப் பாடல்.

"நம்முடைய கள்ளம் நிறைந்த உள்ளத்தைக் கண் காணிப்பார் யாருமில்லை என்ற எண்ணத்தினுல் கள்ளமான எண்ணங்களை வளர விடுகின்றோம். ஆனல், இறைமை என்ற கண்காணி இல்லாத இடம் இல்லை. நம் இதயத்திலும் கண்காணியாக இறைமை கலந்து நிற்கின்றது. இந்த

உண்மையை உணரும் நாம் கள்ள எண்ணங்களை உள்ளத்தி லிருந்து "ஒழித்து விடுகின்றோம்" என்று கூறுகின்றது அப்பாடல்:

*"கண்காணி இல்லென்று கள்ளம்பல செய்வார்*
*கண்காணி இல்லா இடமில்லை காணுங்கால்*
*கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றானைக்*
*கண்காணி கண்டார்* **களவொழிந் தாரே"**

*—(திருமூலர் - 2067)*

எங்கும் நிறைந்து நம் இதயத்திலும் இசைந்து நிற்கும் இறைமை நம் உள்ளத்தைக் கண்காணிக்கும் ஒப்பற்ற ஆற்றலாகவும் உள்ளது. இந்த உண்மையை உணர்ந்து கொண்டால் நம் உள்ளத்தில் கள்ளம் இருப்பதில்லை, ஒழுக்கத்தில் குறைபாடு எழுவதில்லை.

நாம் இறைமையைக் கண்காணி என்று கொண்டாலும் கொள்ளா விட்டாலும், இறையுணர்வு என்ற புனிதமான உணர்வுக்கு முன்னால் புன்மை உணர்வுகள் எதுவும் எழுவதில்லை ஒளிக்கு முன்னால் இருள் அணுகாதது போல், இறைமையில் இசைந்த இதயத்தில் இழிவுணர்வுகள் எழுவது இயலாது. இருப்பினும், இறைமையைக் கண்காணி என்று கூறி அதன் நீர்மையை விளக்கியுள்ளனர் பெரியார்கள்.

நம் வாழ்விலே நமக்குப் புகழினை அளிப்பது ஒழுக்கம். அவ்வொழுக்கத்திற்கு அடிப்படை உள்ளத்தூய்மை. உள்ளத் தூய்மையைக் கண்காணிப்பது இறையுணர்வு. இவ்வாறு, இறையுணர்வால் உயிரினும் மேலான ஒழுக்கத்தின் வழிநின்று உயர்ந்த புகழினை நாம் பெறுகின்றோம்.

---

## வேரில்லா மரம்

*சமயப் பற்றற்ற ஒழுக்கம் வேரில்லா மரம்; ஊற்றுக் கசிவில்லாத ஓர் ஓடை; அது மணல் மீதமைந்த மனை. மழை யில்லாதபோது அது வாழ்வதற் கெளிதாம். ஆனால், புயல் வந்தால் தாங்காது.*

**—பெர்னர்டுஷா.**

# எந்த சிலம்பு?

[பேராசிரியர், ஆ. சிவலிங்கனர், மயிலம்]

**முன்னுரை**

சிலப்பதிகாரத்துக்கு அப்பெயரிடக் காரணமாக இருந்தது எந்த சிலம்பு என்பது பற்றி, டாக்டர், பேராசிரியர், வ. சுப. மாணிக்கனர் அவர்கள், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆயிரத்தெட்டாவது நூல் வெளியீட்டு விழா மலரில் ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார்கள். அவர்கள் கட்டுரையின் முடிந்த கருத்து, 'பாண்டிமா தேவியின் சிலம்பே காரணமாக அமைந்தது' என்பதாம். அவர்கள் கருத்தையும் சிறந்ததாகக் கொண்டு எழுதப்படுவது இக் கட்டுரை.

**சிலம்புகள்**

சிலம்பில் வரும் சிலம்புகள் நான்கு. அவற்றுள் காணும் சிலம்புகள் இரண்டு, கண்ணகிச் சிலம்புகள். காணுச் சிலம்புகள் இரண்டு, பாண்டிமாதேவியின் சிலம்புகள். கண்ணகியின் சிலம்புகளுள் ஒன்று கோவலன் கையிற் சென்றும், மற்றொன்று கண்ணகியின் கையில் இருந்தும் கதையை நடத்துகின்றன. பாண்டிமா தேவியின் சிலம்புகளுள் ஒன்று பொற்கொல்லனல் திருடப்பட்டுக் கோவலன் கொலைப்படற்கும், பிற துன்பங்களுக்கும் காரணமாகின்றது. மற்றொன்று பற்றிய பேச்சே யில்லை. எனவே, நான்கனுள் மூன்று பற்றியே கதையில் வருதலின் அம் மூன்றனுள் எச்சிலம்பு சிலப்பதிகாரத்துக்குப் பெயர்க் காரணமாய் அமைந்திருக்கலாம் என்பது கருத வேண்டுவதாம்.

## 1. செஞ்சிலம்பு

மாதரியின் வீட்டிலிருந்து கண்ணகியின் காற் சிலம்பு ஒன்றை எடுத்துக் கொண்டு விற்றுவர மதுரை வீதியிற் கோவலன் சென்றபோது, எதிரே அரண்மனைப் பொற்கொல்லன் வரக் கண்டு அவனிடம், 'பாண்டிமா தேவியின் காற்கு அணியாகக் கூடிய சிலம்பு ஒன்றற்கு நின்னல் விலை மதிப்பிட முடியுமா' எனக் கேட்க அவன், முன்னமே தான் திருடிய அரண்மனைச் சிலம்பும் கோவலன் கைச்சிலம்பும் ஒத்திருப்பது கண்டு, கோவலனைக் கள்வனுக்க எண்ணி அரசனிடம் சென்று கூறி, 'அவன் ஆணையென்று' கோவலனைக்

கொலைப்படுத்தும் வரையில் கோவலனிடமிருந்த அந்தச் சிலம்பு, பின்னர்ப் பாண்டியனிடம் சென்று, கண்ணகியால் வழக்குரைத்து முடிவில் உடைக்கப்பட்டு மாணிக்கப் பரலால், 'தான், பாண்டிமா தேவியின் காற்சிலம்பு இல்லை' என்பதை நிறுவிக் 'கோவலன் கள்வன் அல்லன்' என்னும் அளவுக்கும் துணையாய் நின்றது. இதனால் கோவலன் கையில் இருந்த சிலம்பே நூலுக்குப் பெயர் இடக் காரணமாய் அமைந்தது என்னலாம். அது கருதி இளங்கோவடிகள் இதனைச் "செஞ்சிலம்பு" (3. 25 : 73.) என்றார்.

## 2. பொற்சிலம்பு

கோவலன் கொலைப்பட்டான் என்பது கேட்டுத் தன்னிடம் இருந்த மற்றொரு சிலம்பைக் கையில் கொண்டு ஊர் சூழ்ந்து அரண்மனை யடைந்து அரசனிடம் வழக்குரைத்தாள் கண்ணகி. அவள் கையிலிருந்த சிலம்பு அரசனையே அதிரவைத்தது. கண்ணகிக் கையகத்துச் சிலம்பைக் கண்ட அரசன், கோவலனிடத்திலிருந்து கைப்பற்றிய சிலம்புடன் அஃது ஒத்திருப்பது தெரிந்த மாத்திரத்தால் 'நீதி பிறழ்ந்தோம்' என்ற உணர்வு கொண்டவனானன் என்று கூறலாம். சிலம்பின் வழக்குரை காதையைப் படித்த யாரோ ஒருவர் இக்கருத்துப் படவே,

"காவி யுகுநீரும் கையிற் றனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வுடலும்—பாவியேன்
காடெலாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயி னான்"

"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கய்யிற் றனிச்சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றான் காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்"

என்ற இரண்டு தனிப் பாடல்களைப் பாடியுள்ளமையும் இதை வலியுறுத்தும். கோவலன் கைச்சிலம்பின் தரம் அறியக் கண்ணகியின் கைச்சிலம்பின் பொன், மணி, செய்வினைப் பொலிவு முதலியவை காரணமாக அமைந்தன. அதனால் கண்ணகிக் கைச்சிலம்பை இளங்கோவடிகள் 'பொற்சிலம்பு' எனக் கூறினர். பிறவாறும் கூறியிருப்பினும் இது சிறப்புடையது எனக் கருதி நாமும் அதனை அவ்வாறே கூறுவோம்.

"தேரா மன்னா" (3. 20 : 50), "நற்றிறம் படராக் கொற்கை வேந்தே" (3. 20 : 67) என்றெல்லாம் தன்னைத்

தாழ்த்திச் சினந்து கூறவும் தான், அவளை யாதும் சினந்து கூறுது வழக்கையே அரசன் எண்ணுமாறு செய்தது பொற் சிலம்பு. 'என் சிலம்பு மணியரியுடையது' என்று சொல்லு மளவில் மட்டுமின்றிக் கோவலனிடமிருந்து கைப்பற்றப்பட்ட செஞ்சிலம்பை உடைத்துக் கோவும், கோத்தேவியும் இறக்கு மளவும் கண்ணகிக் கையிடத்ததாகவே இருந்தது பொற் சிலம்பு. இப்படி எண்ணியவர் அரும்பதவுரைகாரர். வழக்குரை காதையிறுதியில்,

*"அல்லவை செய்தார்க் கறங்கூற்ற மாமென்னும்*
*பல்லவையோர் சொல்லும் பழுதன்றே —பொல்லா*
*வடுவினையே செய்த வயவேந்தன் தேவி*
*கடுவினையேன் செய்வதூஉங் காண்"*

என்ற தனி வெண்பாவுக்கு அரும் பதவுரை எழுதி முடிவில்,

"இதனால் இராசாத் துஞ்சினபின்பு கண்ணகி தன் கைச்சிலம்பைத் தேவி முன்னே யெறிந்தாள்"

என்றெழுதி யுள்ளார்.

எனவே செஞ்சிலம்பு, 'கோவலன் கள்வன் அல்லன்' எனக் காட்டினாலும், பொற்சிலம்பு, வழக்காடவும், 'செஞ் சிலம்பும் தன் இணையான மற்றொரு சிலம்பே' என நிறுவவும் பயன் பட்டது ஆதலின் பொற்சிலம்பின் காரணமாகவும் சிலப்பதிகாரம் எனப் பெயர் இடப்பட்டிருக்கலாம்.

## 3. கோயிற்சிலம்பு

இனி மூன்றுவதாக வுள்ள சிலம்பு பொற்கொல்லனால் கரந்து கொள்ளப்பட்ட அரண்மனைச் சிலம்பாகிய பாண்டிமா தேவியின் காற்சிலம்பு. இதனைப் பொற்கொல்லன் கோயிற் சிலம்பு (2. 16 : 145) என்றான். இச் சிலம்பு பொற்கொல்லனாற் கரந்து கொள்ளப்பட்டமையால்தான் கோவலன் கொலைப் பட்டதும், கண்ணகி வழக்குரைத்ததும், வேந்தும் வேந்தியும் இறந்ததும், மதுரை தீக்கிரை யாகியதும் கண்ணகி தெய்வமாகி யதும் நிகழ்ந்தன. எனவே இச்சிலம்பு இல்லை யென்றால் கதையே நடந்திராது. ஆதலின் கோயிற் சிலம்பே சிலப்பதி காரத்துக்குப் பெயரிடக் காரணமாய் அமைந்தது என்னலாம். இதையே பேராசிரியர், வ. சுப. மா. அவர்கள் வற்புறுத்தி னார்கள். அவர்கள் காட்டும் ஒரு காரணம் மிகவும் போற்றி நினைதற்குரியதாம்.

"தீவினைச் சிலம்பு காரண மாக
ஆய்தொடி யரிவை கணவற் குற்றதும்
வலம்படு தானை மன்னவன் முன்னர்ச்
சிலம்பொடு சென்ற சேயிழை வழக்கும்
செஞ்சிலம்பு எறிந்து தேவி முன்னர்
வஞ்சினம் சாற்றிய மாபெரும் பத்தினி" (3. 25 : 69-74.)

என்ற வரிகளில் தீவினைச் சிலம்பு, சிலம்பு, செஞ்சிலம்பு எனச் சிலம்பு மூன்று வகையில் கூறப்படுதலின் அவை, மூன்று (தனித் தனிச்) சிலம்புகளாகும். 'தீவினை நிகழ்ச்சிக் கெல்லாம் காரணமாக அமைந்தது கோயிற் சிலம்பாதலின் அது தீவினைச் சிலம்பு எனப்பட்டது'. இக் கருத்தைப் பேராசிரியர் நன்கு வலியுறுத்தியது புறக்கணிக்கப்படற் குரியதன்று.

இதுகாறும் கூறியவாற்றால், சிலப்பதிகாரப் பெயர் மூன்று சிலம்புகளின் சிறப்புகளாலேயே அமைந்தது, என்னலாம். இக்கருத்தை வற்புறுத்தும் வகையில் பதிகத்தின் துணையை நாடலாம்.

**பதிகம்**

"அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற்றுவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரான்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"
—(சிலப். பதிகம் 55 - 60)

இவ்வரிகள் சிலப்பதிகாரம் பாடக் காரணம் கூறியன. சிலம்பின் பெயரால் சிலப்பதிகாரம் எனப் பெயரிடப் பட்டதென்பதும், அச்சிலம்பு மூன்று உண்மைப் பொருள்களுக்கு மூலகாரணமாக அமைந்தது என்பதும் இவ்வரிகளால் உறுதிப்படுத்தப்பட்டன. இனி அம்மூன்று உண்மைப் பொருள்களுக்கும் காரணமாம் சிலம்புபற்றிக் காண்போம்.

### 1. அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றுவது – செஞ்சிலம்பு.

பாண்டியன் செய்த அரசியல் பிழையென்ன? அப்பிழைக்கும் சிலம்புக்கும் தொடர்பு என்ன? பாண்டியன் செய்த அரசியல் பிழை கோவலனைக் கள்வன் எனக் கொலைப்படுத்தியது பொய்த்தொழிற் கொல்லன் சொல்லை நம்பி, ஆராயாது முடிவு செய்தது. தன்னொடு ஊடிச் சென்ற தேவியை ஊடலுணர்த்த

வேண்டிக் காமவயத்தனாய்ச் சென்ற காலத்துக் கொல்லன் சொல்லை நம்பி அவனுக்கு, 'எண்ணியது முடித்தேன்' என்று அவன் மகிழும் அளவுக்குத் தான் தாழ்ந்து விட்டது. இவையெல்லாம் அரசன் செய்த அரசியல் பிழைகளே. இப்பிழைகளைச் செய்யக் காரணமாய் அமைந்தது, கோவலன் கையில் இருந்த செஞ்சிலம்பேயாகும். கோயிற் சிலம்பு ஒன்று காணவில்லையென்ற அளவில் அதுபற்றிய எண்ணமேயில்லாதிருந்த அரசனுக்கு 'அச்சிலம்புதான் இது' என்று எண்ணுமாறு அமைந்து கோவலனைக் கொலைப்படுத்தியது தவருகக் காட்டிக் கொடுத்து அரசனைப் பிழை செய்யவைத்தது இச்செஞ்சிலம்பேயன்றோ? அதனால் வெளிப்படையாக அமைந்தது இதுவே. கண்ணகிக் கைச்சிலம்பு அரசனுக்கு அறிய வாராமையாலும், திருடப்பட்ட சிலம்பு செஞ்சிலம்பே என எண்ணிவிட்டமையாலும் மற்றைய சிலம்புகள் அரசியல் பிழைப்புக்குக் காரணம் ஆகா என்னலாம்.

ஆய்ச்சியர் குரவைமுடிவில் கோவலன் கொலைப்பட்டது கேட்ட கண்ணகி துன்புற்று, ''மன்னவன் தவறிழைப்ப அன்பனையிழந்தேன்'' (2-18: 36-37) என்றதும் இதை வலியுறுத்தும். கோவலன் கைச்சிலம்பு ஒன்றைக் கண்டுதானே மன்னவன் தவறிழைத்தான்?

## 2. உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தல் – பொற்சிலம்பு:

இந்த உண்மைப் பொருளுக்குக் காரணமாக இருந்தது கண்ணகிக் கையிற் பொற்சிலம்பே என்னலாம். கண்ணகி வழக்குரைக்குமுன் அவளைத் தெய்வமாக எண்ணியவர்கள் (சாலினி - கவுந்தியடிகள் தவிர) மதுரை ஆயர் மக்கள். கண்ணகி ''குரவையின் வந்தீண்டும் ஆய மடமகளிர் எல்லீரும் கேட்டைக்க'' என்று விளித்துக் கூறிப் பின், ''காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என்கணவன்?'' எனக் கேட்டு ''கள்வனோ அல்லன்; ஒள் எரியுண்ணும் இவ்வூர்'' எனக் கதிர்ச்செல்வனால் 'தன்கணவன் கள்வன் அல்லன்' என்பதைக் காட்டியதால் ஆயமகளிர் கண்ணகியைத் தெய்வமாகக் கருதினர்.

மேலும் கண்ணகி மற்றொரு சிலம்பு கையிற் கொண்டு பலவாறு அரற்றித் திரிகையில்,

> ''செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால்
> வம்பப் பெருந்தெய்வம் வந்தது'' (2 - 19: 23 - 24)

என்று மதுரை மக்கள் கண்ணகியைக் கருதினர்.

அடுத்து அரண்மனை வாயில் காவலன், கண்ணகியின் தோற்றம் கண்டு அரசனிடம் கண்ணகியின் வரவுபற்றிச் சொல்லவந்தவன், அவளைப்பற்றிக் கொற்றவை, பிடாரி, காளி முதலிய தெய்வங்களாகத் தடுமாறிக் கூறினான்.

அடுத்து மதுரையை எரியூட்டியபோது நெருப்புக்கடவுள் ஏவல் கேட்டதும், மதுராபதித் தெய்வம் கண்ணகிமுன்வர அஞ்சியதும் பிறவும் அவள் பத்தினித் தெய்வம் என்பதை அறிவிக்கும்.

இப்படிக் கண்ணகியைத் தெய்வமாக்கியது இவள் கைப் பொற்சிலம்பே என்னலாம். இச்சிலம்பு இல்லையென்றால் தன் கணவன் வைத்திருந்தது இதன் இணையான ஒருசிலம்பே என ஊர்க்கும் அரசனுக்கும் அறிவிக்க முடியாதன்றோ?

இச்சிலம்பு இல்லாமல் செஞ்சிலம்பையே உடைத்து அது மணியுடையரியது எனக் காட்டி வெல்லலாம் என்றால், அச்சிலம்பும் ஒருகால் வேறெங்கேனும் திருடப் பட்டதென்று கூறிவிடலாமல்லவா? அதனால் வழக்கில் வெல்வதற்குப் பொற்சிலம்பே காரணமாக அமைந்தது. அதனால் "சிலம்பின் வென்ற சேயிழை" என்று இவளை எல்லாரும் சொன்னார்கள். செங்குட்டுவனிடம் அவன்தேவி, "நம் அகன் நாடடைந்த இப்பத்தினிக் கடவுளைப் பரசல்வேண்டும்" (3 : 25 : 113-114) என்று கண்ணகியைக் கடவுளாகக் கூறியதும், அதுகேட்டுச் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்ததும் எல்லாம் பொற்சிலம்பினாலல்லவோ? எனவே பொற்சிலம்பு இரண்டாவது உண்மைப் பொருளுக்குக் காரணமாக அமைந்தது என்னலாம்.

**3.** ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்—கோயில் சிலம்பு :

இத்தொடர்க்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் "முன்செய்த இருவினையுஞ் செய்தமுறையே செய்தோனை நாடிவந்து உருக்கொண்டுநின்று நுகர்விக்கும்" என்றெழு தினார். ஊழ்வினை உருக்கொள்ளுதல் என்பது, பிறர் அல்லது பிறிதொன்றின் வடிவத்தில் அமைதலாம்.

பழம்பிறப்பில் கோவலன், சங்கமன் என்பவனைக் கொல் வித்தபோது அவன் மனைவி நீலி என்பவள்,

"எம்முறு துயரம் செய்தோர் யாவதும்
தம்முறு துயரம் இற்றுகக' (2-23: 162 - 163)

என்ற சாபமே ஊழாக வந்து கோவலனைக் கொல்வித்தது. அவ்வூழ் உருக்கொண்டு வந்தது எவ்வாறெனில், பொற் கொல்லனாகவும், அவன் திருடிய சிலம்பாகவும் வந்தது

என்னலாம். இளங்கோவடிகள் கோவலன் முன்னர் நின்ற பொற் கொல்லனைக் "கூற்றத்தூதன்" (2 - 16 : 115) என்றதும், அவன் செய்த சூழ்ச்சியைத் "தீவினை முதிர்வலை" (2. 16: 156) என்றதும் காணலாம்.

கோயில் சிலம்பு கொல்லன் தன்னைக் கவரச் செய்து அதன்மூலம் அவனால் கோவலனைக் கள்வன் எனச் செய்து, அவனை அரசன் மூலம் கொல்லவும் செய்தது.

அன்றியும் கோவலனைக் கொல்லக் கோயில்சிலம்பு பயன் படாமல் வேறு யாதானும் ஒரு பொருளும் பயன்பட்டிருக்கலாம். அரசன் அரசியல் பிழைத்து அது காரணமாக இறந்தான் என்று ஒரு காரணம் தேவைப்படுதலின் அவன் சம்பந்தப்பட்ட பொருள்மூலமாகவே நடைபெறவேண்டும் "ஒள்ளெரி யுண்ணும் இவ்வூர் (மதுரை)" என்ற காய்கதிர்ச்செல்வன் கூற்றும்,

"ஒள்ளெரி யுண்ண
உரைசால் மதுரையோ டரசுகே டுறும்எனும்
உரையும் உண்டு" (2 - 23 : 135 - 137)

என்ற மதுராபதி கூற்றும் பார்க்கும்போது அரசனுக்கும் மதுரைக்கும் இருந்த ஊழ்வினை கோயிற்சிலம்பு மூலம் உருவெடுத்து வந்தது என்றும் கொள்ள வேண்டும். அதனால் ஊழ்வினைக்குக் கோயில்சிலம்பே காரணமாக அமைந்தது என்னலாம். பொற்சிலம்போ செஞ்சிலம்போ காரணமாக அமைதற்கில்லை. ஏன் எனின் ஊழ்வினை வெளிப்படாதது. வெளிப்படும் உருவத்தின் மூலம் பயனை எய்துவிப்பது. அதற்கேற்பக் கோயில் சிலம்பை யடிகள் நமக்குக் காட்டவில்லை. அதன் அமைப்பும் நமக்குத் தெரிவிக்கப்படவில்லை. செஞ்சிலம்பு போல இருப்பது என்பதும் முத்துடையரியது என்பதுமே தெரிவிக்கப்பட்டன. அதன் செயல் கொல்லன் மூலம் பயனை உறுவித்ததாகும்.

பேராசிரியர் அவர்கள் கூற்றுப்படி 'தீவினைச்சிலம்பு' என்றது கோயில் சிலம்பே என்பதில் சிறப்பும் உண்டு.

**முடிப்புரை :**

எனவே மூன்று உண்மைக் கருத்துகளுக்கு மூன்று சிலம்புகளும் பொருத்தமாக அமைதலின், சூழ்வினைச்சிலம்பு காரணமாகச் சிலப்பதிகாரம் எனப்பெயர் இட்டது பொருத்தமே. அதனால் சிலம்புகள் மூன்றுமே சிலப்பதிகாரப் பெயர்க்குக் காரணமாக அமைவன எனக் கொள்ளலாம்.

# உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

## குல்[1] (தோன்றற் கருத்து வேர்ச்சொல்)

தோன்றற் கருத்தினின்று, இளமை, மென்மை, சிறுமை, குறுமை முதலிய கருத்துக்கள் கிளைக்கும்.

குல் — குன் — குன்னி = சிறுபிள்ளை, சிற்றுயிரி, சிறு பொருள். 'நன்னியுங் குன்னியும்' என்பது பாண்டி நாட்டு உலக வழக்கு.

குல்—குள்—குளகு=1. இளந்தழை. "வாரணமுன் குள கருந்தி" (கலித். 42). 2. விலங்குணா. "மறிகுள குண்டன்ன மன்னு மகிழ்ச்சி" (நாலடி. 17). "இலைநுகர் விலங்கு ணவே குளமெென வியம்ப லாகும்." (சூடா. 6 : 32) 3. தழையுடை. "குளகரைச் சுற்றிய குறமடந்தையர்" (காசிகண். 44 : 16). 4. இலைக்கறி. (W).

குளகு — குளகன் = இளைஞன். "குளகன் வந்துழி" (கந்தபு. குமார. 1).

குள—குழ=இளமையான. "மழவுங் குழவும் இளமைப் பொருள" (தொல். உரி. 14). குழ—வ. குட (guda).

குட என்னும் வட சொல்லினின்று குழ என்னுந் தென் சொல் திரிந்துள்ளதாகச் சென்னைப் ப. க. க. த. அகர முதலி தலைகீழாகக் காட்டியுள்ளது.

குழ — குழவு = இளமை.

குழவு — குழவி=1. இளஞ்சேய், கைக்குழந்தை. "ஈன்ற குழவி முகங்கண் டிரங்கி" (மணி. 11 : 114). 2. யானை, ஆவு, எருமை, கடமை, மரை, குரங்கு, முசு, ஊகம் முதலிய விலங்கின் இளமைப் பெயர். (தொல். மரபியல், 19—23). 3. ஓரறி வுயிரின் இளமைப் பெயர். "வீழில் தாழைக் குழவி" (தொல். மரபியல், 24, உரை). 4. ஒரு குறுமைப் பொருள் முன் னொட்டு. "குழவித் திங்கள்" (தொல். மர. 24, உரை).

ஒ. நோ : E. *cule*, F. *cule*, L. *culus, cula, culum.—clim. suf.* E. *cule—cle, cel* etc.

குழ — குழந்து — குழந்தை=1. கைப்பிள்ளை. "குழந் தையை யுயிர்த்த மலடிக்கு" (கம்பரா. உருக்கா. 65). 2. நடை

பழகுஞ் சிறுபிள்ளை. 3. இளம்பருவம். "குழந்தை வெண் மதி" (கம்பரா. ஊர்தேடு. 209).

ஒ. நோ: OE. *cild*, E. *child*. c=k.

குழவு—குழகு=1. குழந்தை. "குழகென வெடுத்துகந்த வுமை" (திருப்பு. 106). 2. இளமைச் செவ்வி. "கொம்மைக் குழகாடுங் கோலவரை மார்பர்" (சீவக. 2790). 3. அழகு. "கொன்றை சூடிக் குழகாக...........விளையாடும்" (தேவா. 468 : 7).

குழகு—குழகன்=1. இளைஞன். "நின்மணக் குழகன்" (திருவிளை. திருமண. 44). 2. அழகன். "கொட்கப் பெயர்க்குங் குழகன்" (திருவாச. 3 : 12). 3. முருகன். (பிங்.). 4. பிறர்க்கிணங்குபவன். "குரவை கோத்த குழகனை" (திவ். திருவாய். 3 : 6 : 3).

குழமகன்=1. இளம் பருவத் தலைவன். "குழமகனைக் கலி வெண்பாக் கொண்டு .... விளங்க வுரைத் தாங்கு" (இலக். வி. 858). 2. பெண்டிர் குழமகனைப் புகழும் பனுவல். (தொன். 283). 3. மரப்பாவை. "உத்தரியப் பட்டுங் குழமகன் றனக்கு நல்கி" (பாரத. நிரைமீ. 136).

குழ—குழை=தளிர். "பொலங்குழை யுழிஞை" (புறம். 50). க. கொழச்சி.

குழ—குழலை—குதலை=1. மழலைச் சொல். "தம் மக்கள் மழலைச்சொற் கேளா தவர்" (குறள். 66). 2. இனிய மொழி. "குதலைச் செவ்வாய்க் குறுந்தொடி மகளிர்" (சிலப். 30 : 114). 3. அறிவிலான், (திவா.).

ஒ. நோ: மழ—மழலை—மதலை=குழந்தை, மகன், மழலை மொழி.

குழ—குழந்து—கொழுந்து = 1. இளந்தளிர். "ஏற்ப விரீஇய இலையுங் கொழுந்தும்" (பெருங். இலாவாண. 2 : 143). 2. இளமையானது. "பிறைக்கொழுந்து" (நைடத. அன். தூது. 12). 3. மென்மை. "வாழையுற்ற—கோதிலா மடலே போலக் கொழுந்துள செவிய தாகி" (சூடா. 12 : 150). 4. மென்மையான மருக்கொழுந்து. "கொழுந்து செவ்வந்தி" (கந்தபு. இந்திரன்கயி. 42). 5. படையின் முன்னணி. "சேனை யின் கொழுந்துபோய்க் கொடிமதின் மிதிலையி னெல்லை கூடிற்றே" (கம்பரா. எழுச்சி. 24). 6. கவரிநுனி. "கொழுந் துடைய சாமரை" (கம்பரா. கோலங். 25).

ம. கொழுந்நு.

கொழுந்து — கொழுந்தாடை = கரும்பின் நுனித்தழை. குழ—குத—கத—கதலி—கசளி = கெண்டைக் குஞ்சு.

குல்—குர்—குரு. குருத்தல் = 1. தோன்றுதல். "அதி னின்று மொருபுருடன் குருத்தான்" (விநாயகபு. 72 : 4) 2. வேர்க்குரு உண்டாதல்.

குரு — குருத்து = 1. இளந்தாள், இளந்தோகை, இளவோலை. 2. கரும்புநுனி. "குருத்திற் கரும்புதின் றற்றே" (நாலடி. 211). 3. காதுக்குருத்து. 4. இளமை. 5. வெண்மை. (பிங்.). 6. யானை மருப்பின் உட்பகுதி. "ஆளி நன்மான்.....வேழத்து வெண்கோடு வாங்கிக் குருத்தருந்தும்" (அகம். 381).

ம. குருத்து.

குருத்து—குருந்து = (பிங்.). 1. குழந்தை. 2. வெண் குருத்து.

குருந்து—கருந்து = மரக்கன்று. (உ. வ.). குரு—குருகு. 1. பனங்குருத்து. "குருகு பறியா நீளிரும் பனைமிசை" (பரிபா. 2 : 43) 2. இளமை (சூடா.). 3. விலங்கின் குட்டி, "சிங்கக் குருகு" (திவ். திருப்பா. 1, வியா.). 4. வெண்மை. (திவா.).

வெண்மைக் கருத்து, பனங்குருத்தி னின்று தோன்றிற்று.

ம. தெ., து. குரு.

குருகுக்கிழங்கு = இளங்கிழங்கு.

குரு — குரும்பை = 1. தென்னை பனைகளின் இளங்காய். "இரும்பனையின் குரும்பைநீரும்" (புறம். 24 : 2). 2. இளநீர். "குன்றுங் குரும்பையும் வெறுத்தநின் னிளமுலை" (கல்லா. 52:8)

ம. குரும்ப, க. குரும்பெ.

குரு—குருள்—குருளை = 1. குழந்தை. "அருட் குருவாங் குருளை" (சி. சி. பரபக். பாயிரம். 4). 2. நாய், பன்றி, புலி, முயல், நரி முதலியவற்றின் குட்டி.

> "நாயே பன்றி புலிமுயல் நான்கும்
> ஆயுங் காலை குருளை யென்ப"
>
> "நரியும் அற்றே நாடினர் கொளினே"

(தொல். மரபியல், 8, 9.)

3. பாம்பின் குட்டி. "சிறுவெள் ளரவி னவ்வரிக் குருளை" (குறுந். 119).

ஒ. நோ : குட்டி = சிறுபெண், E. *girl*, female child.

M. E. *gurle*, *girle*, *gerle*, perh. cogn. with LG. *gor*, child.—C. O. D.

குருமன் = ஒருசார் விலங்கின் இளமைப் பெயர்.

குருமன் — குருமான். 'குட்டிகுருமான்' என்பது உலக வழக்கு.

குரு—கரு = 1. சூல். "மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்" (புறம். 34). 2. முட்டை. 3. முட்டைக்கரு. "புறவுக்கரு வன்ன புன்புல வரகின்" (புறம், 34). 4. பிறப்பு. "கருவைத் துடைப்ப" (பிரபுலிங். கொக்கி. 15). 5. உடம்பு. "கருவுள் வீற்றிருந்து" (திவ். திருவாய். 5 : 10 : 8). 6. குழந்தை. "சோரர்தங் கருவைத் தங்கள் கருவெனத் தோளி லேந்தி" (பாரத. நிரை. 116). 7. குட்டி. "காசறைக் கருவும்" (சிலப். 25 : 52). 8, வினைமுதற் கரணியம் (நிமித்த காரணம்) "கருவா யுலகினுக்கு" (திருவாச. 10 : 14). 9. அச்சுக்கரு. "திருவுருவினைக் கருவினுற் கண்டு" (திருவிளை. இரச. 9.). 10. நடு. 'உள்ளூர்க் கருவெலா முடல்" (கம்பரா. கிங்கரர். 44). 11. உட்பொருள். 12. அடிப்படை. "கருவோ டிவரடி ...... .... காணுமையின்" (இரகு. நகரப். 20). 13. நுண்ணணு. "கரு வளர் வானத்து" (பரிபா. 2 : 5). 14 கருப்பொருள். "தெய்வ முணவே.........கருவென மொழிப" (தொல். அகத். 18).

ம. கரு.

கரு = நடு. ஒ. நோ : ME, E. *core*.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகர முதலி, கரு என்னும் தூய தென்சொல்லைக் கருப்பம் (garbha) என்னும் வடசொல்லினின்று திரித்துள்ளது. வடசொல்லே தென் சொல்லினின்று தோன்றியிருத்தல் வேண்டும்.

குள்—குட்டு—குட்டம் = குரங்குக்குட்டி. "தங்குட்டங்களை ..........மந்திகள் கண்வளர்த்தும்" (திவ். பெரியாழ். 3 : 5 : 7),

க., மராத்., குட்ட (gudda).

குட்டம்—குட்டன் = 1. சிறுபிள்ளை. "என் சிறுக்குட்டன்" (திவ். பெரியாழ். 1 : 4 : 9). 2. இளமகள். "குயிலெனப்

பேசுமெங் குட்டனெங் குற்றது'' (திருக்கோ. 224). 3. ஆட்டுக் குட்டி. (திவா).

ம. குட்டன், க. குட்ட (gudda).

குட்டு—குட்டி= 1. நாய், பன்றி, புலி, முயல், நரி ஆகியவற்றின் குட்டி. (தொல். மர. 10). 2. ஆட்டுக்குட்டி. 3. சிறுமி. (உ. வ.). 4. கடைசிப் பிள்ளையின் பொதுப் பெயர். கடைக் குட்டி (உ. வ.).

ம. குட்டி. க. குட்டி (guddi).

ME. *kide*, E. *kid*, *kiddy*.

5. கரு அல்லது சினை.

எ - டு: குட்டிபடுதல்=சினைப்படுதல்.

ஓரறிவுயிர்ப் பெயரின் இளமைப்பொருள் முன்னொட்டு. எ - டு: குட்டிப் பிடவம், குட்டிவிளா (பிள்ளை விளாத்தி). 6. சிற்றப்பன் சிற்றன்னையர் பெயர் முன்னொட்டு. எ - டு: குட்டியப்பன், குட்டியாத்தாள்.

குள்—குய்—குய்ஞ்சு—குஞ்சு=1. பறவையின் இளமைப் பெயர். எ - டு: கோழிக்குஞ்சு, புருக்குஞ்சு. ''காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு'' (பழமொழி). 2. மீன், எலி, அணில் முதலியவற்றின் இளமைப் பெயர். 3. குழந்தை அல்லது சிறுவன் ஆண்குறி, 4. சிறியது.

ம. குஞ்ஞு. க. கூசு (குழந்தை).

குஞ்சு—குஞ்சான்=குழந்தை அல்லது சிறுவன் ஆண்குறி.

குஞ்சு - குஞ்சி=1. பறவையின் இளமைப் பெயர். ''கரிய குஞ்சியின் ருக மார்பசி'' (சி. சி. பர. மாயாவாதிமறு. 1.). 2. சிற்றப்பன் சிற்றன்னையர் பெயர் முன்னொட்டு. எ - டு: குஞ்சியப்பன், குஞ்சியாத்தை, குஞ்சியாச்சி, குஞ்சியாய் (யாழ்ப்.) 3. குழந்தை அல்லது சிறுவன் ஆண்குறி. 4. சிறியது.

குஞ்சு—குச்சு—கொச்சு=சிறியது.

கொச்சுப் பையன்=சிறுவன். ம. கொச்சு.

கொச்சு—கொச்சன்=சிறுவன்.

குய்—குயம்=இளமை. (திவா.).

குயம்—கயம்=1. இளமை. (திவா.). 2. மென்மை (பிங்.).

"கயவென் கிளவி மென்மையுஞ் செய்யும்" (தொல். உரி. 24)

கயந்தலை = 1. குழந்தையின் மெல்லிய தலை.

"முக்காழ் கயந்தலைத் தாழ" (கலித். 86 : 2)

2. யானைக்கன்று.

"துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே"
(கலித். 11)

சிறுபிள்ளைகளைக் கன்றுகயந்தலை யென்பது பாண்டி நாட்டு வழக்கு.

**சிறுமைக் கருத்தும் குறுமைக் கருத்தும்**

குஞ்சுக் கடகம் = சிறிய ஓலைப்பெட்டி.

குஞ்சுச் சிப்பி = சிறிய முத்துச் சிப்பி. குஞ்சுப் பெட்டி = சிறிய பெட்டி. (யாழ்ப்.).

குஞ்சம் = 1. குறள். (திவா.). 2. குறளை. (திவா.). 'குப்ஜ' என்னும் வடசொல்லை இதற்கு மூலமாகச் சென்னைப் ப. க. க. த. அகர முதலியிற் குறித்திருப்பது தவறு. வளைந்தது என்பதே வடசொற் பொருள். 3. குன்றிமணி. (திவா.).

குஞ்சன் = குறளன் (பிங்.).

குஞ்சி = குன்றிமணி. குஞ்சிப் பெட்டி = சிறுபெட்டி. குஞ்சிக்கூடை = சிறுகூடை (W.). குஞ்சு — கொஞ்சு—கொஞ்சம் = சிறிது. "கொஞ்சநந்தங் கின்பந் தந்து" (திருப்பு. 609).

ம. கொஞ்சம், தெ. கொஞ்செமு, க. கொஞ்ச, து. கொந்த்ர.

கொஞ்சன் = புல்லன் (அற்பன்). "வஞ்சன் கொஞ்சன்" (திருப்பு. 609).

கொச்சு = சிறிது, சிறிய.

கொசு = மிகச் சிறிய ஈவகை. கொசு — கொசுகு. "கொசுகீ.......எய்திடம்" (காசிகண். 40 : 17).

கொசுகு—கொதுகு. "கொதுகருக் கண்ணனி ஞெண்பிகள்" (தேவா. 381 : 9).

ம. கொதுகு.

குள்—குண்—குணில்=1. குறுந்தடி. "கரும்பு குணிலா மாங்கனி யுதிர்க்கும்" (ஐங்குறு. 87). 2. பறையடிக்குங் குச்சு. "குணில்பாய் முரசினிரங்கு மருவி" (புறம். 143).

குதலி—கதலி=சிறுகாய் வாழை. மொந்தன் வாழைக்கு எதிரானது. "நெட்டிலைப் பைங்கதலி" (திருக்காளத். பு. தாருகா. 15).

குருவி=1. சிறு பறவை வகை. "குருவி சேர்வரை" (சீவக. 2237). 2. குன்றிமணி. (மலை.).

குருவிக்கண்=1. சிறுகண். 2. சிறுதுளை. குருவித்தலை= சிறுதலை. குருவித் தேங்காய்=சிறு தேங்காய்.

குள்—குள்ளம்=1. குட்டை. 2. குறள்.

குள்ளல்=குள்ளம். குள்ளை=குள்ளம்.

குள்ளன்=1. குட்டையன். 2. குறளன்.

ம. குள்ளன். குள்ள—வ. குல்ல (kh)—குல்லக, குல்ல— க்ஷுல்ல—க்ஷுல்லக.

குள்ளை—கூழை=1. குட்டை, குட்டையானது. "நாய் கூழைவாலாற் குழைக்கின்றது போல" (திவ். திருவாய். 9 : 4 : 3). 2. மதிக் குறைவு. "கூழை மாந்தர்தஞ் செல்கதி" (தேவா. 462 : 9). 3. கூழைத் தொடை. "ஈறிலி கூழை" (காரிகை. உறுப். 19). 4. குள்ளப் பாம்பு.

தெ. கூள, க. கூழெ, மராத், கூள (kh).

குள்—குள்கு—குட்கு—குக்கு. குக்குதல்=உடம்பைக் குறுக்கி வைத்தல். ஒ. நோ : வெள்கு—வெட்கு, சுள்—சுள்கு—சுட்கு—சுக்கு. குக்கு—குக்கல்=சிறுநாய் வகை. "குக்கலைப் பிடித்து நாவிக் கூண்டினி லடைத்து வைத்து" (வி. சிந்.).

தெ. குக்க, வ. குக்குர.

குக்கல்—குக்கன்=சிறுநாய் வகை (திவா.).

குக்கர்=நாய்போ விழிந்தோர். "குடிமையிற் கடைமைப் பட்ட குக்கரில்" (திவ். திருமாலை. 39).

குட்டம் = 1. குறுமை. 2. செய்யுளடிக் குறுமை. "குட்டமும் நேரடிக் கொத்தன வென்ப" (தொல். செய். 114).

குட்டான்=1. சிறு படப்பு. 2. சிறிய ஓலைப்பெட்டி. குட்டான் கட்டுதல்=பறவை கொத்தாதபடியும் அணில் கடியாத படியும் காய்களின்மீது மூடி கட்டுதல்.

குட்டான்—கொட்டான்=சிறுநார்ப் பெட்டி அல்லது ஓலைப்பெட்டி.

கொட்டான்+காய்+சில் = கொட்டாங் காய்ச்சி—கொட் டாங்கச்சி.

குட்டி=சிறியது. குட்டிக்கலகம், குட்டிக்கிழங்கு, குட்டிச் சாத்தன், குட்டிச்சுவர், குட்டித் திருவாசகம், குட்டித் தொல் காப்பியம், குட்டிப்பல், குட்டிமணியம், குட்டியாண்டவன், குட்டி விரல், குட்டித் தெய்வம் (சாமி) என்பன சிறுமை குறித்தன.

குட்டு—குட்டை=1. குறுகிய உருவம். 2. குட்டேறு (சிறிய காளை). "குட்டேற்றைக் கோவர்த்தனனைக் கண்டீரே" (திவ். நாய்ச். 14 : 2). 3. சிறு துணி. எ - டு: தலைக் குட்டை, கைக்குட்டை. தெ. குட்ட (gudda). 4. சிறுகுளம். 5. குட்டை மரம் (தொழுமரம்). 6. குறுணி. (தொல். சொல். 400, உரை).

குட்டை—கட்டை=1. உயரக் குறைவு. எ - டு: ஆள் கட்டை, கட்டைமண். 2. அகலக் குறைவு. எ - டு: அகலக் கட்டை. 3. நீளக் குறைவு. எ - டு: கட்டைவிரல், கட்டைத் துடைப்பம், துடைப்பக் கட்டை. 4. மதிப்புக் குறைவு. எ - டு: விலைக்கட்டை, கட்டைப்பொன். மாற்றுக் கட்டை. 5. ஓசைக் குறைவு. எ - டு: கட்டைக் குரல் (சாரீரம்). 6. ஒருவகை இசைக் குற்றம்.

*"தனிபடு கட்டை யெட்டின் றகுதியிற் றிகழும் பொல்லா*
*வினிமையில் சுரத்தைக் கண்டாங் கிருந்தவர் வியந்தா ரில்லை"*
*(திருவால. 57 : 26)*

7. திறக்குறைவு. எ - டு: கட்டைமதி (புத்தி).

இதன் மூலத்தை அறியாது, மரக்கட்டை, விறகுக்கட்டை, செப்புக்கட்டை முதலியவற்றின் தடிப்பத்தைக் குறிக்கும் கட்டை யென்னும் சொல்லோடு இணைத்துள்ளது, சென்னைப் ப. க. க. த. அகரமுதலி.

குரு—குறு=1. சிறு. 2. குறுகிய. ம. குறு.

குறு—குற்றி=சிறு குச்சு. குற்றி—குச்சி—குச்சு.

குறு+இல்=குற்றில்—குச்சில். ஒ. நோ:

முறம் + இல் = முற்றில் — முச்சில்.

குச்சில்—குச்சு. குச்சுவீடு = சிறு கூரைவீடு.

குறு—குற்று—குற்றம் = குறைவு, தவறு.

குறு—குறை—குறைவு, குறைச்சல்.

குறுமகன் — குறுமான் = சிறுவன். குறுஞ்சிரிப்பு—குஞ்சிரிப்பு.

குறு—குறள். 1. குறுமை. "குண்டைக் குறட் பூதம்" (தேவா. 944 : 1). 2. குறட்பூதம். (பிங்). 3. ஈரடி உயரமுள்ள குள்ளன். "தேரை நடப்பனபோற் குறள்" (சீவக. 631). 4. சிறுமை. "வரகின் குறளவிழ்ச் சொன்றி" (பெரும்பாண். 193). 5. இருசீர் கொண்ட குறளடி. 6. ஈரடி கொண்ட குறள்வெண்பா. 7. குறள் வெண்பாவாலான திருக்குறள். "உலகங் கொள்ள மொழிந்தார் குறள்" (திருவள்ளுவ. 33). ம. குறள்.

குறள்—குறளி = 1. குறியவள். "ஒரு தொழில் செய்யுங் குறளி வந்து" (சீவக. 1653, உரை). 2. சிறிய குறளிப் பேய். "வாயிலிடிக்குது குறளியம்மே" (குற்ரு. குற. 71). 3. குறளி வேடிக்கை. 4. கற்பழிந்தவள் (சூடா.).

குறள்—குறளை = 1. குள்ளம். (W). 2. சிறுசொல், கோட்சொல். "பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில் சொல்லென" (மணி. 30 : 68). 3. வறுமை. "குறளையுள் நட்பளவு தோன்றும்" (திரிகடு. 37). 4. பழிச்சொல்.

ம. குறள.

குறு—குறில் = குற்றுயிரெழுத்து.

குறுணி = பதக்கினும் குறைந்த முகத்தலளவு.

குறும்பு = 1. சிறு துணுக்கு. எ - டு: புகையிலைக் குறும்பு. 2. சிறுமலை. 3. சிறுமலை யரண். "குறும்பல் குறும்பிற் றதும்ப வைகி" (புறம். 177). 4. மலையரணிலுள்ள குறுநில மன்னர். "குறும்படைந்த வரண்" (புறம். 97). 5. வேந்தருக்குப் பகைவரான குறும்பரசர். "வேந்தலைக்கும் கொல் குறும்பும் இல்லது நாடு" (திருக்குறள், 735). 6. குறும்பரசரின் வலிமை, வலிமை. "அரவுக் குறும்பெறிந்த சிறுகட்டீர்வை" 7. குறும்பரசர் போர். 8. குறும்பரசரின் குறும்புத்தனம், தீய விளையாட்டு. 9. குறும்பரசர் ஆண்ட பாலைநிலத்தூர்.

10. பாலை நில மாந்தர். 11. குறும்பர் என்னும் வகுப்பார். எ - டு : காட்டுக் குறும்பு, நாட்டுக் குறும்பு.

குறும்பாடு = குறும்பர் மேய்க்கும் ஆடு.

குறும்பன் = குறும்புத்தன முள்ளவன்.

குறு—குறுகு. குறுகுதல்—குட்டையாதல்.

ம. குறுகு, தெ. குருச்ச.

குறுகு—குறுக்கு = 1. குறுமை. "நீண்ட நெடுமையும் அகலக் குறுக்குங் காட்டா" (தாயு. சிதம்பர. 13). 2. நீளத் திற்கு எதிரான அகலம். 3. குறுக்களவு. "நெடுமையுங் குறுக்கு நூற்றெட் டங்குலம்" (காசிகண். சிவ. அக. 17). 4. முதுகின் குறுக்கு. குறுக்குப் பிடித்துக் கொண்டது; நிமிர முடியவில்லை (உ. வ.). 5. ஊடு, இடை. நான் பேசும்போது குறுக்கே ஒன்றும் சொல்லாதே. (உ. வ.). 6. மாறு, எதிர்ப்பு. அவன் எதற்குங் குறுக்காகப் பேசுவான் (உ. வ.).

குறுக்கு—குறுக்கம் = 1. குறுமை. "ஐ ஒளக் குறுக்கம்" (நன். 99). 2. $\frac{3}{4}$ முதல் 7 செய் (ஏக்கர்) வரை வெவ்வே றிடத்தில் வெவ்வேறு வகையாக வழங்கும் நில அளவு.

குறுவை — குறுகிய காலத்தில் விளையும் நெல்.

குறுமல் = பொடி (பிங்.).

குல்—குன்—குன்று.

குன்றுதல் = 1. குறைதல். 2. சுருங்குதல். 3. தளர் தல். 4. நிலைகெடுதல். "குன்றி னனையாருங் குன்றுவர்" (குறள். 965).

குன்று = சிறுமலை. குன்று—குன்றம் = பெருங் குன்று. ம. குன்னு—குன்னம். தெ., க. கொண்ட. குன்றி = சிறிய குன்றிமணி. "குன்றுவ குன்றி யனைய செயின்" (குறள். 965). ம. குன்னி.

குன்—குன்னு. குன்னுதல் = குக்குதல், உடம்பு சுருங்கு தல்.

குன்—குன்று. குன்றுத்தல் = உடம்பு குளிரால் ஒடுங்கு தல். "குன்றுக்க வென்பாரு முளர்" (நெடுநல். 9, உரை).

குன்—குன்னி = சிறியது, நுண்ணியது.

# பண்டைத்தமிழ் இலக்கண இலக்கியங்கள்

டாக்டர் ஐயரவர்கள் 1-5-1936 இல் புலவர் திரு கு. குமாரசாமி பிள்ளை அவர்கட்கு எழுதிய *கடிதத்தில் "தொல்காப்பிய வுரைகள்—எந்த வுரையாயிருந்தாலும்—எந்தப் பகுதிக்குரையாயிருந்தாலும் வேண்டுவனவே" என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து அவர்கட்குத் தமது 82 ஆவது அகவையில் தளர்ச்சியுற்ற நிலையிலுங்கூடப் பண்டைத் தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பிய வுரைகளை யெல்லாந் தொகுத்துத் திருத்தமான பதிப்பாக வெளியிட வேண்டுமென்று அவர்கள் பேரவாக் கொண்டிருந்தார்க ளென்பது தெள்ளத் தெளிய விளங்குகிற தன்றோ? ஆனால், தொல்காப்பிய வுரைகளில் ஒன்றுகூட அவர்கள் பதித்து வெளியிடவில்லை. அது போல் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பதினெண்கீழ்க்கணக்கு நூலகளில் ஒன்றும் அவர்களால் வெளியிடப் பெறவில்லை. எட்டுத் தொகை நூல்களிலும் அகநானூறு, கலித்தொகை, நற்றிணை ஆகிய மூன்றும், காப்பிய நூல்களில் சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, உதயண குமார காவியம் ஆகிய வற்றைத் தவிர ஏனைய காப்பிய நூல்களும் அவர்கள்வழி வெளியிடப் பெறவில்லை. ஆனால், அவர்கள் பதித்துள்ள நூல்கள் யாவும் ஏட்டுச் சுவடிகளைக் கொண்டே ஆய்வு செய்து வெளியிடப் பெற்றுள்ளன. கழகமோ பண்டைத்தமிழ் இலக்கண இலக்கிய நூல்களனைத்தையும் உரை விளக்கங்களோடு அச்சிட்டு வெளியிடவும் அவற்றை யெல்லாம் ஒரு பேழையில் அமைத்து விற்று வரவும் தமிழ்த்தாய் தண்ணருள் அளித்தருளினள். ஆனால், கழகம் அவற்றையெல்லாம் ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு ஆய்வு செய்து வெளியிடவில்லை என்பது உண்மை. முன்னமே டாக்டர் ஐயரவர்களும் சி. வை. தாமோதரனாரும் மற்றும் புலவர் சிலரும் ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு பேருழைப்போடு ஆய்வு செய்து அச்சிட்டு வெளிப்படுத்திய நூல்கட்கு நாவலர் வேங்கடசாமி நாட்டார், ஔவை சு. துரைசாமிபிள்ளை, பெருமழைப் புலவர் சோமசுந்தரனார், பண்டித புலவர் கு. சுந்தரமூர்த்தி முதலாயினோரைக் கொண்டு உரை விளக்கங்கள் எழுதச் செய்து கழகம் வெளியிட்டு நிறைவு செய்தது. பண்டைத்தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பேருழைப்போடு ஏட்டுச் சுவடிகளை ஆய்வு செய்து முதன்முதல் அச்சிட்டு வெளியிட்ட புலவர் பெருமக்கட்கும், உரையில்லாத நூல்கட்கு உரை எழுதியும், முன்னமேயுள்ள உரைநூல்கட்கு விளக்கம் எழுதியும் உதவிய கழகப் புலவர் பெருமக்கட்கும் கழகமும் தமிழகமும் நன்றி செலுத்துங் கடப்பாடுடையனவாகும்.

வ. சு.

---

* ௧௨௩ ஆம் பக்கம் பார்க்க.

# அறிஞர் மோதிலாலும் சன்மதி நூல்நிலையமும்

இராசஸ்தான் மாநிலத்தில் செய்ப்பூர் மாவட்டத்தில் சோமுநகரில் 1876 ஆம் ஆண்டிற் பிறந்தவர் அறிஞர் மோதிலால். 1907 இல் நடுநிலைப் பள்ளியின் தலைமை யாசிரியராக அவர் பணியேற்றார். அவர் பெற்ற மாத ஊதியம் ரூ. 15. 1937 இல் ஓய்வு பெறும்போது ரூ. 40 பெற்றார். அவர் ஓய்வுகால ஊதியமாகப் பெற்றது ரூ. 20. தொடக்கத்தில் திங்கள்தோறும் ரூ. 7 அல்லது 8 வரை ஏழை எளியவரின் உணவுக்காகச் செலவிட்டார் பின்னர் ரூ 10/-வரை புத்தகங்கள் வாங்கி ஒரு நூலகத்தை அமைத்தார். அவர் ஓய்வு பெற்ற போது மாணவர்கள் ஆயிரத்து நூறு ரூபா அவருக்கு அன்பளிப்பாக அளித்தனர். அவர் அத்தொகையைப் படிப்ப தற்கு வசதியற்றவர்களுக்காகப் பயன்படுத்தினர்.

தம்மிடமிருந்த ஆயிரத்து ஐந்நூறு நூல்களை வைத்து 1920 இல் 'திரு சன்மதி நூல்நிலையத்தை'த் தொடங்கினர். தம் வேலைநேரம் போக மற்ற நேரங்களில் நூல்களை எடுத்துக் கொண்டு நண்பர்கள் வீட்டிற்கும் பெருமக்களின் இல்லங் களுக்கும் சென்று. அவர்கள் விரும்புகிற நூல்களைப் படிப்பதற்குக் கொடுப்பார். உரிய காலத்தில் வேறு நூல்களை அவர்களிடம் கொடுத்து விட்டுப் பழைய நூல்களைத் திரும்பப் பெற்று வருவார். இவ்வாறு அவ்வூர் மக்களிடையே படிக்கும் பழக்கத்தை உண்டாக்கினர். மாணவர்கள் பாடப்புத்தகங்கள் வாங்குவதற்கு வசதியில்லாதிருப்பின் அவர்களுக்கு அவற்றை யும் வாங்கித் தாமே காசின்றி வழங்குவார். பாடப்புத்தகங்களின் பல படிகளை வாங்கித் தம் நூலகத்தில் சேர்த்து வைத்து மாணவர்கட்குப் படிக்கக் கொடுப்பார். இன்று நடைமுறையி லுள்ள பாடப்புத்தக நூல்நிலைய முறைக்கு அன்றே மோதிலால் வித்திட்டுள்ளார்.

ஓய்வுபெற்றபின் முழுநேரமும் நூலகப் பணியிலேயே ஈடுபடுத்தினர். உண்பதற்குமட்டுமே வீட்டிற்குச் செல்வார். உறங்குவதுகூட நூலகத்திலேதான். அவர் அந்த நூலகத்தை நிறுவியவர் மட்டுமல்லர் ; அதன் காப்பாளர் — புரவலர் — மேலாளர்—எழுத்தர்— ஏவலர்—அனைவரும் அவர் ஒருவரே

நாம். எல்லாப் பணிகளையும் அவர் ஒருவரே செய்தார். புத்தகங்களைத் துடைப்பது — வாங்குவது — அவற்றுக்கு அட்டைபோடுவது—பதிவேட்டில் பதிவது—படிப்பவர்களுக்கு வழங்குவது—வழங்கிய நூல்களைத் திரும்பப்பெறுவது ஆகிய எல்லாப் பணிகளையும் முறையாகச் செய்துவந்தார். எல்லா நூல்களையும் அவர் படிப்பதுண்டு. இருப்பினும் சமய நூல் களையே அவர் விரும்பிப் படித்தனர். வருபவர்கள் கதைப் புத்தகங்களையே விரும்பிக் கேட்பராம். இரண்டு கதை நூல்களைக் கொடுத்துவிட்டு ஒரு சமய நூலையும் கொடுத்துப் படிக்கச் செய்வாராம். திருப்பிக் கொண்டுவரும் போது சமய நூலில் எப்பகுதி புரியவில்லை என்று கேட்டுத் தாமே விளக்குவாராம். அவர்கள் அதைப் படிக்கவில்லையென்றால் அதையே மீண்டும் கொடுத்துப் படிக்கச் சொல்வாராம். இவ்வாறு தம் வாழ்நாளில் 30,000 நூல்களைத் தம் நூலகத்திலே சேர்த்துவைத்திருந்தனர்.

தெரிந்தவர், தெரியாதவர் அனைவருக்கும் புத்தகங்களைக் காசின்றி வழங்கியுள்ளார். அவர் நூலகத்தில் புத்தகம் படிக்கவோ வீட்டிற்கு எடுத்துச்செல்லவோ எவ்வகை கட்டணமும் கிடையாது. புத்தகங்களை இத்தனை நாள்களுக்குள் திருப்பித்தர வேண்டுமென்ற கட்டாயமும் கிடையாது. இவ்வாறு நூல்களை மக்கள் விரும்பிப் படிக்கவேண்டுமென் பதற்காக அறிஞர் மோதிலால் எழுபது ஆண்டுகட்கு முன்னரே நூலகப்பணியை மிகச் சிறப்பாகச் செய்துள்ளார். இராசஸ்தான் மாநிலத்தில் நூலக இயக்கத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த அவர் 1949 இல் காலமானர். இன்று அந்நூலகம் அதன் பெயரால் அமைந்துள்ள அறப்பணிக் குழுவால் நடத்தப்பெற்று வருகின்றது ஏறத்தாழ 50,000 நூலகள் இன்றுள்ளன. இந்நூலகத்தின் புதிய கட்டிடம் செய்ப்பூரில் மூன்று இலக்க ரூபாயில் கட்டத் திட்டமிடப்பெற்று ஒரு பகுதிவேலை முடிந்துள்ளது. அதற்குரிய நிலத்தை இராசஸ்தான் மாநில அரசு அன்பளிப்பாக வழங்கியுள்ளது. ஒரு பள்ளி ஆசிரியர் தம் ஓய்வுநேரப் பணியாகத் தொடங்கிய சிறு முயற்சி இன்று பெரிய நூலகமாக மலர்ந்துள்ளது.

---

# ஆந்திரத்தில் பிரிவினைக் கிளர்ச்சி

இந்தியா மொழியடிப்படையில் மாநிலங்களாகப் பிரிக்கப் பட்டபொழுது தெலுங்கு பேசப்படும் தெலுங்கானு, ஆந்திரா பகுதிகளை இணைத்து 'ஆந்திரப் பிரதேசம்' என்ற ஒரே மாநிலமாக அமைக்கப்பெற்றது. அதிலிருந்து அவ் விருபகுதி மக்களிடையேயும் அவ்வப்போது பூசல்கள் இருந்துவந்துள்ளன. அது பெரிய அளவில் 'தெலுங்கானு' கிளர்ச்சியாக 1969 இல் உருவெடுத்தது. அச்சமயம் அம்மாநில முதலமைச்சராக ஆந்திரத்தைச்சார்ந்த பிரமானந்த ரெட்டியார் இருந்தார். தெலுங்கானு பகுதி தொழில், பொருளாதாரவளர்ச்சி பெறுமல் மாற்ருந்தாய் மனப்பான்மையால் புறக்கணிக்கப்படுகிறது என்பது அன்றைய கிளர்ச்சியாளர்களின் குறைபாடு.

அக்குறையை நீக்கத் தெலுங்கானு பகுதியைச்சார்ந்த நரமசிம்மராவ் முதலமைச்சராக்கப்பட்டார். ஆனுல், தற்பொழுது ஆந்திரர்களால் புதிய கிளர்ச்சி தொடங்கப்பட்டுள்ளது. அம்மாநிலத்தில் தெலுங்கானுப் பகுதியில் வாழும் மக்களுக்கு அரசாங்கப்பணி ஏற்பதில் அதிக வாய்ப்பைத் தரும் 'முல்கி விதிகளுக்கு நடுவண் அரசு 1977 ஆண்டுவரை உயிரூட்டியுள்ளது.

இதனுல் ஆந்திரப் பகுதியினர் அரசுப்பணி ஏற்கும் வாய்ப்பு மிகக்குறைவாக இருக்கும். ஒரே மாநிலத்தில் ஒரு பகுதி மக்களுக்கு அதிகவாய்ப்பும் மறுபகுதி மக்களுக்குக்குறைந்த வாய்ப்பும் அளிக்கும் 'முல்கிவிதி'கள் மக்கள் பொது உரிமைக்கு எதிர்ப்பாக உள்ளது என்று ஆந்திரர்கள் கிளர்ச்சி செய்து வருகிருர்கள்.

மூன்று திங்கட்கு மேல் பள்ளி, கல்லூரிகள் திறக்கப் பெறவில்லை. பெரும்பாலான இரயில்கள் ஓடவில்லை. பேருந்துகள் முழுவதும் நிறுத்தப்பட்டுவிட்டன. அரசாங்க ஊழியர் அனைவரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆந்திரப் பகுதியைச் சார்ந்த நாடாளுமன்ற, மாநிலச்சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் உறுப்பினர் பொறுப்பைத் துறந்துவிட்டனர். அரசாங்கச் சொத்துகள் நாசமாக்கப்பெறுகின்றன. இரயில் நிலையங்கள் கொளுத்தப் பெறுகின்றன. மொத்தத்தில் அங்குச் சட்டமும் ஒழுங்கும் சீர் குலைந்து விட்டன.

இவற்றின் பயனுகக் குடியரசுத்தலைவர் ஆட்சி ஆந்திரத்தில் மலர்ந்துள்ளது. அதன்பின்னரும் நடுவண் அரசு எதிர்பார்த்தவாறு கிளர்ச்சி நிற்கவில்லை. இன்னும் ஆங்காங்குத் துப்பாக்கிச் சூடுகள் நடைபெறுகின்றன.

ஆந்திரர்கள் தனிமாநிலம் கேட்கின்றனர். இது புதுவகையான வேண்டுகோள் அன்று. ஒரேமொழிபேசும் மக்கள் வாழ்கின்ற வேறு சில மாநிலங்கள் வெவ்வேறு காரணங்களால் தனித்தனி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பஞ்சாப், அரியானு, மேகாலயா, அருணுசலப்பிரதேசம் போன்றவை இவ்வாறு அமைக்கப் பெற்றனவேயாகும். அதனுல் ஆந்திரத்தை இருகூருகப் பிரிப்பதைத்தவிர நடுவணரசுக்கு வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை.

———

# சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் பத்துநாள் கருத்தரங்கு

'இடைக்காலத் தமிழின் இலக்கிய இலக்கண இயல்புகள்' என்ற பொதுப்பொருள்பற்றி, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை இரண்டாவது பொதுநிலைப் பத்துநாள் கருத்தரங்கை 22—1—73 முதல் 31—1—73 வரை பத்துநாள்கள் நடத்தியது. முதல்நாள் இக்கருத்தரங்கினைத் தமிழகக் கல்வியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தொடக்கநாள் நிகழ்ச்சிகட்குத் தலைமை தாங்கினார். துணைவேந்தர் தாமரைத்திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் இயற்றிய 'சங்க இலக்கிய அட்டவணைகள்' என்ற நூலையும் சென்னைப் பல்கலைக்கழக நூலகம் தொகுத்த 'இடைக்காலத் தமிழின் இலக்கிய இலக்கண இயல்புகள்' நூற்குறிப்புரைகையினையும் வெளியிட்டார்.

முதல் ஏழுநாள்களிலும் சைவத்தின் பன்னிரு திருமுறைகளும் இறுதி மூன்று நாள்களில் சமண, பௌத்த, வைணவ நூல்களும் ஆராயப்பெற்றன. கருத்தரங்கின் பொதுப்பொருள் 'இடைக்காலத் தமிழின் இலக்கிய இலக்கண இயல்புகள் என்றிருப்பினும் பேரளவு இது சமயக் கருத்தரங்காகவே மிளிர்ந்தது.

இதில் சென்னை, அண்ணாமலை, மதுரை, திருவனந்தபுரம், திருவேங்கடம் ஆகிய ஐந்து பல்கலைக் கழகத்திலிருந்தும் வந்த பேராசிரியர்களும் மற்றும் அறிஞர்களும் கலந்துகொண்டு ஆராய்ச்சியுரை நிகழ்த்தினர். அவர்கள் பெயர்கள் வருமாறு டாக்டர் ச. வே. சுப்பிரமணியம், திரு. சொ. சிங்காரவேலன், திரு. மு. சண்முகம் பிள்ளை, திரு. செ. வேங்கடராமச் செட்டியார். திரு. அ. ச. ஞானசம்பந்தம் திரு. ச. தண்டபாணி தேசிகர், டாக்டர் சுப. அண்ணாமலை, டாக்டர் தேவதத்தா, டாக்டர் சோ. ந. கந்தசாமி, டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் ஆகியோர்.

பத்துநாள் கருத்தரங்கிற்கும் பேரறிஞர்கள் பதின்மர் தலைமை தாங்கிநடத்தினர். சிலம்புச்செல்வர் ம. பொ. சி., திரு. ஜே. ஆர். ஜெயச்சந்திரன், பேரா. பூ. ஆலாலசுந்தரனார். டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி, திரு. மயிலை சீனி வேங்கடசாமி, மாண்பமை நடுவர் எஸ். மகராசன், பேரா. அ. மு. ப., திரு. டி. எஸ். ஸ்ரீபால், திரு. வள்ளல் நா. மகாலிங்கம், மாண்பமை நடுவர் என். கிருஷ்ணசாமி ரெட்டியார் முதலியோர் தலைமை தாங்கினர்.

கருத்தரங்கிற்கு நாள்தோறும் நூற்றுக்கும்மேற்பட்ட தமிழ்ப் பேராசிரியர்களும், மாணவர்களும், பிறரும் வந்திருந்து கருத்தரங்கைச் சிறப்பித்தனர்.

கருத்தரங்கையொட்டிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் மறைமலையடிகள் நூல்நிலையத்திலுள்ள பன்னிரு திருமுறைப் பதிப்புக்கள், சமண, பௌத்த, வைணவ நூல்கள், சமயக் கருத்து விளக்க அட்டைகள் கொண்ட காட்சியை அமைத்திருந்தனர். தேவாரம்,

முதலிய திருமுறைகளின் நூறாண்டுகட்கு முன்பு அச்சிடப்பெற்ற பதிப்புக்கள் காட்சியில் இடம் பெற்றிருந்தன. டாக்டர் ஜி. யு. போப் தம்ஆங்கில மொழிபெயர்ப்புக்காகப் பயன் படுத்திய 'திருவாசக' நூலும் காட்சிக்கு வந்த அனைவரையும் கவர்ந்தது.

காட்சியைப் பற்றிய பெருமக்களின் பாராட்டுரைகளில் சில வருமாறு.

**திரு. வள்ளல் நா. மகாலிங்கம்**

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை சர்வகலாசாலையில் ஏற்பாடு செய்திருந்த சமய இலக்கிய நூற் கண்காட்சியைக் கண்டு மகிழ்ந்தேன். பழந்தமிழுக்கு அன்பர் தாமரைத்திரு. சுப்பையா பிள்ளை அவர்கள் தலைமையில் சை. சி. நூ. ப. கழகம் செய்யும் பணி பாராட்டு தற்குரியது.

**நீதிபதி ரெ. கிருஷ்ணசாமி ரெட்டி**

நூற்பொருட்காட்சியைக் கண்டு மகிழ்ந்தேன்.

**முதுபெரும்புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை**

வரலாறு கண்டிராத வகையில் வளர்ச்சியடைந்து வரும் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத் திருப்பணி, தமிழ்நாட்டுக்கு மட்டு மன்றி, எந்நாட்டுக்கும் பயன் தரத்தக்க தமிழ்த் தொண்டாம் என்பது வெளிப்படை. வாழ்க இத்தொண்டென உளமார வாழ்த்துகிறேன்.

**திருச்சிற்றம்பலம் மு. அருணைசலம்**

அதே கருத்தை யானும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாடர். ந. சஞ்சீவி, எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.**

கழகம் நடத்திய நூற்காட்சி கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து. தமிழ்த்துறையின் தனிநன்றி கழகத்திற்கு என்றும் உரியது.

**டாக்டர். சுப. அண்ணாமலை, மதுரை**

பழந்தமிழ் நூல்களின் பழம் பதிப்புக்களைக் கண்ணுறுதல் பழம்பெரும் புதை செல்வத்தைக் கண்ணுற்றாற் போன்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. இச்செல்வத்தைத் திரட்டிப் பாதுகாத்து வரும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் தொண்டு வாழ்க.

**திரு. ஔவை. நடராசன், எம். ஏ., எம். லிட்.**

இனிய நூற்காட்சியைத் தக்க வகையில் தக்க இடத்தில் மிக்க சிறப்புடன் மிளிரச் செய்தல் கழகத்தின் இயல்பு. கழகம் வாழ்க கலைத்தமிழ் வெல்க.

**திரு. க. அறவாணன், எம். ஏ., பி. ஓ. எல்.**

தமிழ் இருக்கும் இடந்தோறும் நான் கழகத்தைக் காணுகின்றேன். கழகத்தின் கண்காட்சியைக் காணுகின்றேன்,

# செய்திகளும் குறிப்புகளும்

## ஐந்தாவது தேசிய புத்தக வாரவிழா

இந்திய நாடெங்கணும் கொண்டாடப்பெறும் ஐந்தாவது தேசிய புத்தக வாரவிழாவையொட்டித் தமிழ்நாடு பொது நூலகத்துறையின் இயக்குநர் திரு. வே. தில்லைநாயகம் அவர்கள் சென்னைக் கன்னிமரா பொது நூலகத்தில் 28—1—73 முதல் விழாவை ஏற்பாடு செய்துள்ளார். அன்று காலை தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இவ்விழாவினைத் தொடங்கி வைத்தார்கள்.

அவர்தம் தொடக்க உரையில் நம் நாட்டில் படிக்கும் பழக்கம் மிகக் குறைவாக உள்ளது. சிறுவயதிலிருந்தே நல்ல நூல்களைப் படிக்கும் ஆர்வம் இருந்தால்தான் பெரியவர்களானாலும் புத்தகங்களை விரும்பிப் படிப்பர். அதனால் எல்லாப்பள்ளிகளிலும் நூலகவகுப்பைக் கட்டாய மாக்கலாமா என்று கூட எண்ணிவருகிறோம் என்றார்.

அவ்விழாவிற்குச் சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

தொடர்ந்து பெண்கள் நாள், எழுத்தாளர் நாள், பதிப்பாளர் நாள், வாசகர் நாள் முதலிய நாள்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றன. நிறைவு விழாவில் திரு. மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் தாமரைச்செல்வர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் உரையாற்றினர்.

## இறைவழிபாடாற்றும் குரங்கு

பனாஜி என்னும் நகருக்கு நாற்பது கி. மீ. தொலைவில் உள்ள தத்தாத்தரேயர் கோயிலில் ஒரு குரங்கு நாள்தோறும் முறையாக வழிபட்டுவருகிறது. தனக்கேயுரிய சேட்டைகள் ஏதும் செய்யாது மனிதனைப் போலவே அது வழிபடுகிறது.

கோயிலில் நடைபெறும் சொற்பொழிவுகளை அது அடியார்களோடு அடியாராய் அமர்ந்து அமைதியோடு கேட்கிறது. முடிந்தவுடன் கோயிலுக்கெதிரிலுள்ள தன் இருப்பிடத்திற்குச் செல்கிறது. அங்குள்ள நாய்கள் கூட இத்தெய்விகக் குரங்கை ஒன்றும் செய்வதில்லையாம்.

## கடற்கரையில் விலாங்கு மீன்கள்

திருச்செந்தூரையடுத்துள்ள குலசேகரப்பட்டினத்திற்கும் மணப் பாட்டிற்கும் இடையிலுள்ள கடற்கரையில் மூன்று மைல் நீளத்திற்கு ஆங்காங்கு குட்டித் திமிங்கிலங்கள் போன்ற பெரிய மீன்கள் கரையில் ஒதுங்கிக்கிடந்ததைக் கண்டு ஊர் மக்கள் வியப்புற்றனர். அவ்வுளவு பெரிய மீன்களை அதுவரை பார்த்ததில்லையென்றும் அவை உணவுக்கு ஏற்றவையல்ல என்றும் மீனவர்கள் கூறினர். ஒவ்வொரு மீனும் 12 முதல் 15 அடிவரை நீளமிருந்தன. ஆழ்கடலில் ஏற்பட்ட வெடி விபத்தால் அவை இறந்திருக்கக் கூடுமென்று கருதுகின்றனர். அவற்றை அப்புறப்படுத்துவதற்கு வகை தெரியாது மீன்வளத்துறையினருக்கும் வருவாய்த்துறையினருக்கும் மக்கள் செய்தி அனுப்பியுள்ளனர்.

# இறந்தவர்களுடன் எலெக்ட்ரான் வழியில் பேசுதல்

ஆவியுலக ஆராய்ச்சியில் மேலைநாடுகள் வெகுவேகமாக முன்னேறி வருகின்றன. இறந்தவர்களுடன் நாடாப்பதிவுப்பொறியின் துணை கொண்டு பேசமுடியுமென்பதைக் கண்டறிந்து அதைப் பற்றி 400 பக்க அளவில் டாக்டர் கான்ஸ்டேன்டின் ராதிவ், (KONSTANTIN RAUDIVE) பி.எச்.டி. என்பவர் விரிவான நூலொன்றை அண்மையில் இலண்டனில் வெளியிட்டுள்ளார்.

டாக்டர் ராதிவ் புகழ்பெற்ற ஐரோப்பிய உளவியல் அறிஞர். இரண்டாம் உலகப் போருக்குப்பின் சுவீடனிலும் செருமனியிலும் வாழ்ந்து வருகிருர். இதன் மூல நூலைச் செருமன் மொழியில் எழுதியுள்ளார். அஃது ஆங்கிலத்தில் 'BREAK THROUGH' என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப் பெற்று அண்மையில் வெளிவந்துள்ளது.

ஆறு ஆண்டுகட்கு முன் டாக்டர் ராதிவ் தற்செயலாக நாடாப் பதிவுப்பொறியில் தாம் பதிந்து வைத்திருந்த பேச்சுக்களைத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தபொழுது அதற்கு முன்பு கேட்டிராத பல குரல்கள் அதில் பதிவாயிருப்பதை அறிந்தார். வியப்படைந்த அவர் மீண்டும் மீண்டும் போட்டுக் கேட்டபொழுது அவை இறந்த மனிதர் களுடைய குரலென்பதைக் கண்டுகொண்டார்.

மறுமுறை புதிதாகப் பல ஆவிகளின் குரலைப் பதிவு செய்யலானுர். அந்த ஆவிகள் தாம் யார், முற்பிறவியில் தாங்கள் எங்குப் பிறந்தார்கள், தங்களுடைய பழைய வரலாறுகள் ஆகியவற்றைத் தெளிவாகக் கூறின. டாக்டர் ராதிவுக்குப் பழக்க மில்லாதவர்களும் வந்து பேசினர். ஏறத்தாழ 72,000 பேர் அவருடன் பேசியுள்ளனர். அதில் 25,000 குரல்களைமட்டும் ஆராய்ந்து அவர்கள் பேசியவற்றை நூல்வடிவில் கொடுத்துள்ளார்.

மேலைநாட்டினரே இதை ஏற்றுக்கொள்வதில் முதலில் தயக்கம் தெரிவித்தனர். பின்னர் அவர் ஆராய்ச்சியில் பேரறிவியல் அறிஞர்கள் உளவியலறிஞர்கள், சமயப்பேரறிஞர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். அவர்களில் பலர் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள். நாடாப்பதிவு முறையாதலால் பொறியியலறிஞர்களும் இவ்வாராய்ச்சியில் ஈடு பட்டனர்.

இவ்வனைத்துக்கும் மேலாகக் கத்தோலிக்க திருச்சபைகளிலுள் ளோரும் இவ்வாராய்ச்சியை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்திலுள்ள டிரினிடி கல்லூரியினர் பெரட் வார்விக் என்பாரை டாக்டர் ராதிவ் பதிவுசெய்துள்ள குரல்களைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஆணையிட்டுள்ளனர்.

இவ்வளவு அரிய ஆராய்ச்சியை வெளியிட்டுள்ள இந்நூலின் விலை ரூ. 70/=

மேனுட்டினர் அறிவியல் துறையில் எவ்வளவோ முன்னேறி யிருப்பினும் இத்தகைய ஆவியுலக ஆராய்ச்சியிலும் அறிவியல் கண்கொண்டு ஈடுபட்டுப் புதிய புதிய செய்திகளைக் கண்டு பிடித்து

வருகின்றனர். ஆனால், நம்மவர்களில் பலர் ஆவியுலக ஆராய்ச்சி என்பது கட்டுக்கதை என்ற எண்ணம் கொண்டவராயுள்ளனர்.

இறைவன் படைப்பின் விந்தையையும் பேராற்றலையும் நாம் முழுவதும் அறிந்து கொள்ள வேண்டுமாயின் இத்தகைய எல்லா முயற்சிகளிலும் ஈடுபடுவதில் தவறொன்றுமில்லை.

BREAK THROUGH. An amazing experiment in electronic communication with the Dead Konstantin Raudive. Ph. D. Colin Smyth Gevards Cross. Great Britain Rs. 70/00.

## கேரளத்தில் கண்ணகியின் கோயில்

சிலப்பதிகாரத்தின் கதைத் தலைவியான கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் எடுத்த கோயில் கேரளத்தில் இன்றும் உள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் சிலர் கருதுகின்றனர். அக்கோயிலைத் தமிழகத்தின் பொறுப்பிற்குத் தந்துவிட்டால் அதைச் சிறப்பாகப் புதுப்பிக்க முடியு மென்று தமிழக அரசு கேரளத்திடம் கேட்டது.

கேரளத்தில் கோயில்களை நிருவகித்து வரும் தேவஸ்வம் போர்டு அக்கோயில் கேரள எல்லையிலிருந்து உள்ளே 30 கிலோ மீட்டர் தள்ளி இருப்பதால் அதனைத் தர மறுத்துவிட்டது.

வேண்டுமாயின் அக்கோயிலைப் புதுப்பித்து வைப்பதாகவும் தமிழர்கள் அங்கு வந்து வழிபாடு செய்து கொள்ளலாமென்றும் தெரிவித்துள்ளது.

## இந்து சமயத்தை வளர்க்கப் பட்டப் படிப்பு

இந்து சமயத்தைப் பரப்பவும் கோவில்களைப் பாதுகாக்கவும் "தெய்விக சமய மெய்ப்பொருட் பயிற்சிக்கல்லூரி" என்ற பெயரில், அடுத்த கல்வியாண்டிலிருந்து காவிரிப்பூம் பட்டினத்தில் ஒரு தனிக் கல்லூரி துவக்கப்படும் என்றும், இந்தக் கல்லூரியில் மூன்றாண்டுகள் பயின்று, பட்டம் பெறுவோர்க்குத் தமிழகத் திருக்கோவில்களில் பொறுப்பாளர் அலுவல் தரப்படும் என்றும், அண்மையில் குன்றக்குடி அடிகளார் செய்தியாளரிடம் தெரிவித்தார். இந்துசமயத்திற்கென இப்படி யொரு பட்டப்படிப்பினை ஏற்படுத்துவது இந்தியாவில் இதுவே முதல் முறையாகும் எனவும் அவர் தெரிவித்தார். தமிழ்நாடு தெய்விகப் பேரவையினர் கருத்துக் கிணங்க அரசினர் இம்முயற்சியில் இறங்கி யுள்ளனர். இக்கல்லூரியில் படித்துப் பட்டம் பெறுவோர் கிறித்தவப் பாதிரிமார்களைப் போல், இந்து சமயத்தைப் பரப்பும் பணியில் ஈடுபடுத்தப்படுவர். தெய்விகப் பேரவை இவர்கட்கு வேலை வாய்ப் புக்களைத் தேடித்தரும். குன்றக்குடி அடிகளார் மேலும் கூறியதாவது, தீநெறியிற் செல்லும் இக்கால மாணவர்களை நன்னெறியிற் செலுத்தப் பள்ளிகளில் ஒழுக்கக் கல்வி அளித்தலும், அறிவியற் கழகங்கள் அமைத்து இளைஞர்களின் கவனத்தை அவ்வழியிற் செலுத்துதலும் இன்றியமையாதவை. அரசினர் ஒப்புதலோடு நீதி நூல்களைப் பள்ளிகளில் பாடமாக வைக்கத் தெய்விகப்பேரவை துணைபுரியும்,

## திருவாசகமணிக்குப் பாராட்டு

திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களின் 65ஆவது பிறந்த நாள் விழாவும், அவரது சிவத்தொண்டின் 25ஆவது ஆண்டு நிறைவும் அண்மையில் சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயிலில் அக் கோயில் அறங்காவலர் குழுவினரால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

அறங்காவலர் குழுவின் சார்பில் திருவாசக மணிக்குத் திரு. நடராச முதலியார் பாராட்டு இதழ் படித்து அளித்தார். விழாவிற்குத் தலைமைவகித்த சென்னை உயர்மன்ற நடுவர் திரு. என். கிருட்டிணசாமி ரெட்டியார் அவர்கள் திருவாசகமணி அவர்களின் ஆழ்ந்த ஆர்வம் மிக்க சிவத்தொண்டினையும், அவரது இணையற்ற, கவர்ச்சி மிக்க பேச்சின் தனிச்சிறப்பினையும், நுணுக்கமான நகைச் சுவையையும், விஞ்ஞான ஆராய்ச்சி மிக்க விளக்கங்களையும், ஆங்கிலமொழியின் ஆற்றலையும் வெளிநாட்டில் அவர் செய்த சமயப்பரப்புத் தொண்டினையும் பத்தியையும் பெரிதும் விளக்கிப் பாராட்டிப் பேசியபின் கோவிலின் சார்பில் அவருக்குப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார். பின்னர் உயர்நீதி மன்ற நடுவர்கள் திரு. கே. எஸ். வெங்கட்ராமன், திரு. கே. நாராயணசுவாமி ஆகியோர் திருவாசகமணியைப் பாராட்டியதுடன் ஒவ்வொருவரும் அவருக்கு முறையே பொன்னாடை அணிவித்தனர். உயர்மன்ற நடுவர்கள் திருவாளர்கள் கே. எஸ். இராமமூர்த்தி அவர்களும் பி. ஆர். கோகுலகிருட்டிணன் அவர்களும், தமிழ்நாடு திட்டக் குழு உறுப்பினர். டாக்டர் பா. நடராஜன் அவர்களும், முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் திரு. டி. செங்கல்வராயன் அவர்களும், மற்றும் அமெரிக்கன் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் பி. மாணிக்கம், அருட்டிரு. ஞானப்பிரகாசசுவாமிகள், தருமை ஆதீனத்தின் தவத்திரு. மகாலிங்கத் தம்பிரான் ஆகியோரும் முறையே திரு. பாலசுப்பிரமணியத்தின் இணையற்ற, அளவற்ற அனைத்து நாட்டுச் சைவத் தொண்டினையும், தமிழ்ப் பணியையும் பாராட்டிப் பேசினர்.

திருவாசகமணி அவர்கள் தம்மைப் பாராட்டிய அனைவருக்கும் விழாவை நடத்திய திருக்கோயில் அதிகாரிகளுக்கும் தமது நன்றி தெரிவித்துப் பேசினர். கோயிற் பொறுப்பாளர் திரு. டி. நாகராஜன் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

# மதிப்புரை

## திருவள்ளுவர் காட்டும் அரசியல்

[ஆசிரியர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார், எம். எல். ஸி. வெளியீடு: கலைவாணி புத்தகாலயம், சென்னை-17. விலை: ரூ. 3-00]

குறள் கூறும் கருத்துக்களை மக்கட்குப் பயன்படும் வகையில் நூலாக்கித் தருதல் அறிஞர்தம் தலையாய கடன். அவ்வகையில் தவத்திரு அடிகளார் திருக்குறளைப் பல திருப்பங்களினின்று ஆழ்ந்து பயின்று, அவற்றுள் அரசியல் பற்றித் திருவள்ளுவர் கூறும் கருத்துக்களை இருபது தலைப்புக்களில் விளக்கியுள்ளார். கட்டுரைகள் அனைத்தும் கருத்துக்கினியவை. தொட்டனைத்தூறும் அறிவுக்கேணியாக விளங்கும் திருக்குறளைப் படித்துப்பெறும் பயனை இந்நூலைப் படிப்பதால் பெறலாம்.

## குறுக்குத்துறைக் குறவஞ்சி

[**ஆசிரியர் :** வித்துவான் தி. சு. ஆறுமுகம் (கவிஞர் சிவதாசன்) **கிடைக்குமிடம் :** A. சண்முகசுந்தரம், B.A. நூல் வணிகர், திருநெல்லை நகர். **விலை :** குறிப்பிடப்படவில்லை.]

இந்நூல் குறுக்குத்துறையில் எழுந்தருளியுள்ள திருக்குமரன்மீது பாடியுள்ள குறவஞ்சி நூலாகும். இஃது இலக்கிய நயத்துடன் கூடிய இசைப்பாக்களில் அமைந்துள்ளது. கிருபானந்தவாரியார், அ. மு. பரமசிவானந்தம், கி. இராமலிங்கனார், இசைப்புலவர் கா. சங்கரனார் ஆகிய அறிஞர்களின் அணிந்துரையுடன் கூடியது.

## மானிடவியல் கலைச்சொல்லகராதி

(Clossary of Technical Terms of Anthropology)

[**ஆசிரியர் :** சு. சக்திவேல், எம். ஏ., எம். ஏ., **விற்பனை உரிமை :** திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், லிமிடெட், சென்னை—1 திருநெல்வேலி-6, மதுரை-1, கோயமுத்தூர்-1 **விலை** ரூ. 2.50]

பல்கலைகளுள் மானிடவியல் ஒரு கலை. இக்கலை மற்றக் கலைகளை யெல்லாம் கற்றுத்தெளியும் மானிடரின் தோற்றம் வளர்ச்சி ஆகியவை பற்றிக்கூறும் அடிப்படைக்கலை. எனவே, கலைச்சொல்லாக்கப் பணியில் ஈடுபட்டிருப்போர் மானிடவியல்கலை பற்றிய கலைச்சொற்களையும் வகைப்படுத்தல் வேண்டுமன்றோ? அத்தகைய அரும்பணியினைத்தான் செய்துள்ளார் இந்நூலாசிரியர். இதில் மொழி, சமயம், வரலாறு, உடற்கூறு, உளவியல், புள்ளியியல் ஆகியவற்றுக்குரிய அகராதிகளும் இடம் பெற்றுள்ளன. டாக்டர் அகத்தியலிங்கம் அவர்களின் அணிந்துரையுடன் கூடிய பயனுள்ள அகராதி.

## டாக்டர் ராஜா சர் முத்தையசெட்டியார்

[**ஆசிரியர் :** ஆறு அழகப்பன், எம். ஏ., எம். லிட். **கிடைக்குமிடம்.** ஹிக்கின் பாதம்ஸ், பிரைவேட் லிமிடெட் 165 அண்ணா சாலை சென்னை-2 **விலை :** ரூ 5/—]

செல்வர்களாகவும் பொது நலத்துக் குழைப்பவர்களாகவும் இருப்போர் மிக அரியர். அதிலும் குறிப்பாகக் கல்வித்துறையில் நாட்டம் செலுத்துவோர் மிகமிக அரியர். ஆனால், ராஜா சர் அவர்கள் செல்வராக மட்டுமன்றி - ஒரு பெருவணிகராக மட்டுமன்றிப் பொது வாழ்வில், குறிப்பாக அரசியலிலும் கல்வித்துறையிலும் நாட்டம் செலுத்தி, நல்ல பல பணிகளை ஆற்றியவர்களாவார். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இதற்கோர் எடுத்துக்காட்டாகும். ராஜா அண்ணாமலைச் செட்டியாரவர்கள் காலமுதற்கொண்டே இப்பணி தொடர்ந்து வருவதை அன்பர்கள் அறிவர். அத்தகைய வள்ளல் தன்மை படைத்த ராஜா சர் முத்தைய செட்டியாரவர்களின் பணிச்சிறப்புக்கள் என்னும் மணத்தினைப் பரப்பும் அழகிய மலராக மலர்ந்துள்ளது இந்நூல். பதிப்பு முறை பாராட்டத்தக்கது.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.




நாடகக் கலைஞர்


ஔவை தி. க. சண்முகம்

தோற்றம் : **26-4-1912** மறைவு : **15-2 1973**

# கழக விழாக்களில் கலைஞர் சண்முகம்



பேரா. கா. சு. பிள்ளை ஆராய்ச்சி மன்றத் தொடக்க விழாவில்
ஔவை. தி. க. சண்முகம் இறைவணக்கப் பாடல் பாடுதல்



மறைமலையடிகள் நூலகத்தில் ஔவை. தி. க. சண்முகம்,
சிலம்புச் செல்வர், தி. க. பகவதி